# சாளரம்

இளையோர் திங்கள் இதழ்

ஒகஸ்ட் - செப்ரெம்பர் 1994






பொது அறிவைப் பெற்றால்
முழு மனிதர் ஆகலாம்

விலை 15/-

அலுமினியம்
எவர்சில்வர் பாத்திரங்கள்
பீங்கான் கோப்பைகள்
அழகுசாதனப் பொருட்கள்
சிறுவர் சைக்கிள்கள்
விளையாட்டுப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

மற்றும் தற்காலத்திற்கேற்ற
வகையில் தயாரிக்கப்பட்ட
நாகரீகப்பொருட்கள்

இவை யாவற்றையும்
நியாயமான விலையில்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்!

# கலா அழகுக் களஞ்சியம்



65, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

சாளரம் கதவு 4 (28) காற்றலை 12

# புதிய அரசு துணிச்சலுடன் முன்னேறுமா?

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

சிறீலங்காவின் புதிய பிரதமர் திருமதி சந்திரிகாகுமாரணதுங்க தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாக அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்பதில் ஆர்வமுள்ளவராக காணப்படுகின்றார்.

அதன் ஆரம்பக்கட்டமாக சில நல்லெண்ண நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகின்றார்.

எவ்வித பேரம் பேசுதலுமின்றி, நிபந்தனைகளுமின்றி, முன்னைய அரசினால் கொண்டுவரப்பட்ட பொருளாதாரத்தடைகளை சற்றுத்தளர்த்தி இருக்கிறார்.

விடுதலைப் புலிகளிடம் கைதிகளாகவிருந்த பத்துச்சிங்கள காவல் துறையினரை தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுதலை செய்துள்ளார்.

நேரடியாக தலைவர் அவர்களே கையெழுத்திட்டு பிரதமருக்கு கடிதம் அனுப்பியமையும், அதனைத் தொடர்ந்து பிரதமர் தலைவருக்கு கடிதம் அனுப்பியமையும் முக்கியமான நடவடிக்கைகள் எனக்கருதலாம்.

ஆக்கபூர்வமான சில நல்லெண்ண முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழருக்கு உரிமைகள் வழங்கப்படுவதை கடுமையாக எதிர்த்து வரும் சிங்கள இனவாத அரசியல் வாதிகள் சற்று மூச்சு விட்டுக் கொள்வதைப்போல் நொடிப்பொழுது மௌனமாகியுள்ளனர்.

தமிழருக்கெதிராகக் கடுமையாக இனவாதம் பேசி வந்த — தங்களைத் தலைவர்களாக-சிங்களத்தின் காவலர்களாகக்காட்டிக்கொண்ட இவர்களை இப்பாராளுமன்றத் தேர்தல் மூலம் சிங்கள மக்கள் புறக் கணித்துள்ளனர்.

இந்தத் தேர்தல் வெற்றியானது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சிங்களமக்களின் அங்கீகாரம் என பிரதமரும் கூறிவருகின்றார்.

இனவாதம் பேசியவர்கள் நிராகரிக்கப்பட்டமையினையும், வடக்கு கிழக்குப் பகுதியினை தமிழரின் தாயகமாக ஏற்று அவர்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்று அன்றுதொட்டு இன்றுவரை கூறிவரும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டமையினையும் உதாரணம் காட்டி சிங்களவர்களில் பெரும்பாலானோர் இனவாதப் போக்குடையவர்கள் அல்லர் என அரசியல் அவதானிகளும், பத்திரிகையாளர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனாலும் —

சிங்கள இனவாதிகளின் கூச்சல்கள் ஓயப்போவதில்லை. அது தொடர்ந்து கேட்கத்தான் போகிறது.

சமாதானப் பயணத்தின் போது பாதையில் சிங்களப்படையினரால் பல தடைகள் போடப்படலாம்.

இவற்றை எல்லாம் புறம் தள்ளி துணிச்சலான முறையில் புதிய அரசு நடைபோடுமா?

பாசாங்கற்ற, நிர்ப்பந்தங்கள், திணிப்புகளற்ற நியாயமானதோர் தீர்வினை சந்திரிகா அரசு, முன்வைக்குமா?

உறுதிமொழிகள், ஒப்பந்தங்கள் யாவும் ஏமாற்றங்களாகிப் போன கடந்தகால அனுபவங்களினால் தமிழ் மக்கள் மனங்களில் இவ்வாறான கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகவே உள்ளது.

## இந்த இதழில்..


- ☐ சந்திரிகாவின் பழைய சப்பாத்தும் புதிய தொப்பியும்
- ☐ நிலா முற்றம்
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ நோயெதிர்ப்புப் பற்றிய அறிமுகம்
- ☐ கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா
- ☐ வாழக் கற்றுக் கொள்ளல்
- ☐ சிறையில் வாடாதகறுப்பு மலர்
- ☐ அரும்புகள்
- ☐ தெறிப்பு
- ☐ விளையாட்டு
- ☐ அறிவுலகம்
- ☐ அறிவுலகம் கேள்வி பதில்
- ☐ ஆங்கிலம் கற்போம்
- ☐ பொது அறிவுப் போட்டி


பொதுசன நூலகம் மா நகராட்சி மன்றம் -5-10-1994 யாழ்ப்பாணம்

# சந்திரிகாவின் பழைய சப்பாத்தும் புதிய தொப்பியும்

— சாரணன் —

"தயக்கமின்றித் தீர்மானங்களை எடுக்கக் கூடியவர், துணிச்சலுள்ளவர், இடது சாரி எண்ணங் கொண்டவர், புதுமை விரும்பி'' இப்படிப் பல அடைமொழிகள் திருமதி சந்திரிகா விஜேயகுமாரண துங்காவிற்கு உண்டு. இவற்றில் கணிசமான அளவு உண்மைகள் உண்டு. ஆனால் இத்தகைய இயல்புகள் அனைத்திற்கும் அப்பால் இவரது குடும்பப் பின்னணிதான் இவர் பதவிக்கு வருவதற்கான முன் நிபந்தனையாய் அமைந்தது.

ஒருபுறம் பரம்பரையான குடும்ப ஆதிக்கம், மறுபுறம் புதுமை விரும்பி எனும் இரு நேர்எதிரான அம்சங்களின் கலப்பே சந்திரிகா.

இவ்விரு நேர்எதிர் முரண்களையும் விருப்பு வெறுப்பிற்கு அப்பால் நின்று எடை போடுதல் சிறப்பானது.

முதலாவது, இலங்கையின் அரசியல் அகராதியின் படி சந்திரிகா ஓர் ''இளவரசியாகப்'' பிறந்தார்.

அடுத்து இரண்டாவது விடையத்திற்கு வருவோம். உலகில் புதுமை விருப்பத்திற்குப் பெயர் போன பிரெஞ்சு தேசப் பல்கலைக்கழகத்தில் சந்திரிகா சட்டம் பயின்றார். மாற்றங்களை விரும்புகின்ற, தீவிரஎண்ணங்கள் இலகுவில் குடிகொள்ளும் ஒரு பின்னணி அது. அவை சந்திரிகாவிலும் தொற்றின.

உள்நாட்டில் பண்டாரநாயக்க – றத்வத்த குடும்ப மரபுகளை மீறி சொய்ஸா குடும்பத்தில் சாதிமாறித் திருமணம் செய்ய சந்திரிகா ஆரம்பத்தில் எண்ணி இருந்ததாகவும், அவர் ஒரு ''விபத்தில்'' கொல்லப்பட்டுவிட்டதாகவும் ஒரு கதையுண்டு.

சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபட்ட பிரபல நடிகரான விஜேயகுமாரணதுங்கவுடன் சந்திரிகாவின் நட்பு காலகதியில் வளர்ந்து திருமணத்தில் முடிந்தது. இதில் சாதி, குடும்ப மரபுகளைச் சந்திரிகா துணிந்து மீறினார். இதனால் தாயினதும், சகோதரனினதும் கோபத்திற்குள்ளானார். இத்தகைய பின்னணியில் சுதந்திரக் கட்சிக்கு எதிராகத் தனிக்கட்சி அமைத்து அரசியல் நடத்துவதில் கணவனான விஜேயகுமாரணதுங்காவுடன் சந்திரிகா தோள் கொடுத்துச் செயற்பட்டார். சாதி, குடும்பப் பிரச்சனையும் அதனாலான திருமணத்தகராறும் ஒரு புதிய கட்சியின் வளர்ச்சிக்கு வழிவிட்டது.

சுதந்திரக்கட்சியை உடைப்பதற்கு ஒரு தக்க சந்தர்ப்பமாக இதைக் கருதிய ஜே.ஆர். ஜெயவர்த்தன, விஜேயகுமாரணதுங்காவிற்கு பல வகையிலும் ஆதரவளித்தார். வானொலி, தொலைக்காட்சி, அரசசார்புப் பத்திரிகைகளில் எல்லாம் விஜேயகுமாரணதுங்காவிற்கும் அவரது மக்கள் கட்சிக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

விஜேயகுமாரணதுங்காவின் மக்கள் கட்சி விரைவாக வளர்ந்தது. இதில் சந்திரிகா கணவனுக்கு மிகவும் துணையாகச் செயற்பட்டார். இப்போது பல்வேறு சிறிய இடதுசாரி அமைப்புக்களையும் இவர்கள் தம்முடன் அரவணைத்துக்கொண்டனர். விஜேயகுமாரணதுங்கா இலங்கை–இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவளித்துச் செயற்பட்டார். இந்த விடயத்தில் இவர் ஜே.வி.பி.க்குப் பெரும் சவாலாக இருந்தார். இவர் ஜே.வி.பியை வன்மையாக எதிர்ப்பவர். இந்தப்பின்னணியால் விஜேயகுமாரணதுங்கா ஜே.வி.பி.யினால் கொல்லப்பட்டதாகவே பலமாக நம்பப்படுகின்றது. இதற்கு ஜே.வி.பி. உரிமைகோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவரது இளவயதில் தந்தை கொல்லப்பட்டதுபோல, இப்போது இவரது கணவனும் அரசியற் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டுவிட்டார். இதயத்திற்கூடாக விளங்க முற்படுகையில் விஜேயகுமாரணதுங்காவின் மரணம் சந்திரிக்காவிற்கு ஒரு பேரிழப்பு. ஆனால் அரசியலுக்கூடாக விளங்க முற்படுகையில் அந்த மரணம்தான் இன்று சந்திரிகா பதவிக்கு வருவதற்கான கால்கோளைத் தோற்றுவித்தது.

கணவனின் மரணத்தைத் தொடர்ந்து சந்திரிகா தனது தந்தை-தாய் வழிக்குடும்ப உறவைப் பலப்படுத்தவும், சுதந்திரக் கட்சியில் இணையவும் முடிந்தது. இவரது கணவனால் உருவாக்கப்பட்ட கட்சியும், கூட்டணியும் இவரது கணவரின் மரணத்தைத் தொடர்ந்து உடையத் தொடங்கியது. அதனைக் கட்டிக்காக்கவும் வளர்க்கவும் சந்திரிகாவால் முடியவில்லை. பரம்பரைப் பாரம்பரியமே அரசியலுக்கு இலகுவானதாய் சந்திரிகாவிற்குப் பட்டது. ஒரு புறம் சந்திரிகா பழைய பரம்பரைச் சப்பாத்தைக் காலில் அணிந்து கொண்டும், மறுபுறம் பாரிஸின் புதிய தொப்பியைத் தலையில் அணிந்துகொண்டும் பிரயாணம் செய்கிறார். ஒருவரே பழசையும், புதிசையும் கொண்டிருக்கும் நிலை. தமிழர்கள் தொப்பிக்கு ஆதரவளிப்பார்கள் என்பது நிட்சயம். ஆனால் சப்பாத்து என்ன செய்யும்? இனப் பிரச்சினை விவகாரத்தில் தொப்பியே முழுக்க முழுக்க முதன்மை பெறுமானால் அது நாட்டுக்கு நல்லது. இனப் பிரச்சனையோ பழையது. அது வேண்டி நிற்கும் தீர்வோ புதியது. தெரிவு சப்பாத்துக்கும் தொப்பிக்கும் இடையில் உள்ளது. சப்பாத்தா? தொப்பியா?

# நிலா முற்றம்

— விவேக் —

நீண்டதோர் இடை வெளிக்குப் பின் மீண்டும் இந்த நிலாமுற்றத்தில் சந்திக்கின்றோம். இந்த நிலா முற்றச் சந்திப்பை ஆவலோடு எதிர்பார்ப்பதான அறிவிப்புக்கள் அடிக்கடி எமக்கு வரும். அதன் காரணமாகவே வாசல் மீண்டும் திறந்து விடப்படுகின்றது.

எவ்வாறாயினும் - மீளவும் சந்தித்துக்கொள்வதில் மகிழ்ச்சிதான்.

நான் பார்த்தவற்றில் - படித்தவற்றில்- என்னுள் பதிந்தவற்றை இனிய அனுபவங்களாக உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் களமாகவே இந்நிலா முற்றம் அமையும்.

அந்த வகையில், அண்மையில் வாசித்த நூலொன்றில் காணப்பட்ட சீதனம் பற்றிய சில கவிதைகள் இப்பந்தியை எழுதத் தூண்டின.

சீதனம் என்பது சமுகத்தில் பெண்களுக்கு தீங்கிழைக்கும் ஒரு முக்கிய காரணியாக இருந்து வருகின்றது.

அதே நேரம், இக்காலகட்டத்தில் சீதன எதிர்ப்புப் பற்றியதோர் விழிப்புணர்வும் புதிய முனைப்புப் பெற்று வருவதைக் காண்கின்றோம்.

சீதன முறைமைக்கெதிரான பரப்புகைகளும் இன்று அதிகரித்துள்ளன. சட்டங்கள் மூலம் இதனைத் தடுத்து நிறுத்த முடியுமா என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றன.

மனமாற்றத்தினாலேயே இதனை முற்றாக மாற்றியமைக்க முடியும் என்பதே பொதுவான கருத்தாகவுள்ளது.

இன்றைய பாபபுகை கூட சமுகத்தில் மனமாற்றங்களை, ஏற்படுத்தும் விதமானதாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

சீதனம் பெண் வீட்டாரினால் பெண்ணுக்கு விரும்பிக் கொடுக்கப்படுகின்ற ஓர் அன்பளிப்பு. ஆனால் அது கேட்டு வாங்கப்படுகின்றபோதே பிரச்சனைக்குரியதாகின்றது - இவ்வாறான கருத்தை சில சமுகவியலாளர் தெரிவிக்கின்றனர்.

அக் காலத்தில் ஆண்மகன் தான் பெண்ணுக்கு வரதட்சணை கொடுக்கும்வழக்கமிருந்துவந்தது. வரன் கொடுக்கும் தட்சணை தான் வரதட்சணை என்று அழைக்கப்பட்டது. அது நாளடைவில் வரனுக்கு கொடுக்கப்படுகின்ற தட்சணையாகி விட்டது - இவ்வாறு கருத்துக் கூறுபவர்களும் உள்ளனர்.

எது எவ்வாறாயினும், இந்த சீதன முறையினால் ஏழைகளே அதிகம் பாதிப்புறுகின்றனர். பணம் படைத்தவர்கள் கொடுப்பதற்குத் தயாராகவே உள்ளனர்.

பணவசதி மிக்கவர்கள் தங்கள் அந்தஸ்த்தினை சகல வழிகளிலும் உயர்த்திக்கொள்வதற்காகபடித்த, உயர்பதவியிலுள்ள மணமகன் தன் மகளுக்குக் கணவனாக வேண்டும் என்ற விருப்பில் எவ்வளவு பணத்தையும், பொருளையும் வழங்கத் தயார் நிலையில் உள்ளனர்.

A / L படித்த அழகிய மணமகளுக்கு அரச உத்தியோகம் அல்லது வங்கியில் உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும்,

-இப்படியான விளம்பரங்களை நாம் எமது தினசரிகளில் நாள் தோறும் பார்க்கின்றோம் அல்லவா?

மணமகன் கூட தனது கல்வியறிவையும், உயர் பதவியினையும் பணத்திற்காகவும், பொருளுக்காகவும் பேரம் பேசத் தயாராகவே இருக்கின்றான்.

எமது உணர்ச்சிக் கவிஞர்காசி ஆனந்தன் இவ்வாறு பாடினார்-

''சீதனம் எவன் கேட்டான்
செருப்பை எடுத்தடி
கோவணம் கட்டிய
குப்பனை மணம்முடி''

'குப்பனை' மணம் முடிக்கத்தயாராகாவிடினும் சமநிலையிலான வாழ்க்கைத் துணையை தேடிக் கொள்ளலாம். பேரம் பேசுகின்ற நிலை இதன் மூலமாவது தளர வாய்ப்பிருக்கும் அல்லவா?

எம் மத்தியிலிருக்கும் இந்தச் சீதனப்பிரச்சனை இந்தியாவில் மிகப் பெரிய கொடுமையாக வளர்ந்துள்ளது. பெண்கள் சித்திரவதைக்கும், கொலைக்கும் உள்ளாக்கப்படுகின்ற சம்பவங்கள் அங்கு நிகழுகின்றன.

சீதனம் பெற்று மணம் முடித்த பின்பும்- மேலும் பணம் கேட்டு தங்கள் மனைவிகளை துன்பப்படுத்தும் ஆண்களும் அவனைச் சார்ந்தவர்களும் அங்கு காணப்படுகின்றனர்.

ஆண் வீட்டாருக்கு பணம் தேவைப்படுகின்றபோது, பெண் இம்சிக்கப் படுகின்றாள். பேச்சு, அடி, உதை எனத் தொடரும் இந்த சித்திரவதைகள் கொலையிலும் முடிந்து விடுவதுண்டு.

எரியூட்டிக் கொல்லப் படுகின்ற இச் சாவுகள் தற்கொலைகளாகவும், மண்ணெய் அடுப்பு (ஸ்டவ்) வெடித்து நிகழ்ந்த விபத்துக்களாகவும் முடிமறைக்கப்பட்டுவிடும்.

1983 ஆம் ஆண்டில் இந்தியத தலைநகரான புதுடில்லியில் மட்டும் 690 இளம் பெண்கள் கணவன்- மாமி- மைத்துனி என்போரால் எரியூட்டப்பட்டு இறந்துள்ளனர் என புள்ளி விபரமொன்று கூறுகின்றது.

இதிலிருந்து முழு இந்தியாவி லும் ஆண்டு தோறும் எத்தனை பெண்கள் சீதனக் கொடுமையி னால் கருகி மாண்டு போகின்றனர் என்பதை கணக்கிட்டுப் பாாக்க லாம்.

இக் கொடுமையினை தமிழ்க் கவிஞர் இரா . வேலுச்சாமி இப் படிச் சொல்கிறார்-

''மணமான பின்னும்
மறுபடியும் போர் தொடங்
-கும்
திருமண வாக்குறுதிகள்
தேர்தல் வாக்குறுதிகள்
-போல
திசை தப்பிப் போன போது
இவர்கள்
மதுரையை எரிக்க முடியா
-மல்
மண்ணெண்ணெய்க் குளியல்
-களில்
மரித்துக் கொண்டிருக்கி
-றார்கள்.,,

சீதனத்திற்கு எதிரான சுலோ கங்கள் தமிழீழப் பகுதிகளில் பரவ லாகக் காணப்படுகின்றன. பத்திரி கைகளில் இது பற்றிய கவிதைத் துணுக்குகளை தினசரி பார்க்கின் றோம்.

சில தமிழ்நாட்டுக் கவிதைகளை இங்கே பாருங்கள்.

சீதனம் வாங்கும் ஆண் மகனை கேலி செய்து இப்படி எழுகிறார் கவிஞர் அமுதபாரதி-

''விலைமகள் பற்றி
எல்லோர்க்கும் தெரியும்
விலைமகன் யாரென்று
தெரியுமா?
அவன் தான்
வரதட்சனை வாங்கும்
மணமகன்''

ஆண் மகனின் கபடத் தனத்தை இவ்வாறு விபரிககிறார்.
ஜோதிர்லதா கிரிஜா—

ஐந்து முதல் இருபத்தைந்து
-வரை
அம்மா அப்பாவின் கட்ட
-ளைகள்
அனைத்தையும் மீறிவிடு
-வான்,
அதிலெல்லாம் பேடி
-இல்லை!
இன்னும் பல விதமாக
அம்மாகிழிக்கின்றகோடுகள்
அத்தனையும் அழித்திடு
-வான்
இன்றேல்-
சும்மா அவற்றைத்
தாண்டி விடுவான்
அருமை மகன்
ஆனால்
வரதட்சனை எவ்வளவு
வாங்க வேண்டும்
எனும் பேச்சு வருகின்ற
-போது மட்டும்
அவன்
தாய் சொல்லைத் தட்டாத
தனையன் ஆவான்.''

பணமே குறியாகவுள்ள ஆண் களைப் பார்த்து இன்னொரு பெண்கவிஞர் அரசு மணிமேகலை இப்படிச் சொல்கிறார்—

''இந்த நாட்டின்
இணையிலா ஆடவர்
ஏழு லட்சம் தட்சணை
-என்றால்
எழுபது வயது
பெண்ணையும் மணப்பர்.
பெண்களை என்ன
பிணத்தையும் மணப்பர்.''

கவிஞர் துறவி சீதனம் வாங்கும் இளைஞர்களைப் பார்த்து இப்ப டிக் கேட்கிறார்—

''ஓ...வாலிபனே
உனது
ஆண்மையின் கம்பீரத்தை
கேவலம்
சீதனக் கல்லறையிலா
சவமாக்கிப் புதைப்பது?''

மைக்கல் என்றொரு கவிஞரின் கவிதை இது—

'கண்ணிமை' களெல்லாம்
கடை வீதிகளில்
காயப்படும் போது,
காப்பியக் காதலிக்கு
கற்சிலை எடுக்கும்
தேசமிது!,

பெண்களின் மன விரக்தியா கக் கொப்பளிக்கும் நீலமணியின் கவிதை இது—

நாங்கள்
சுயம்வர ராஜ குமாரிகள்
-அல்ல
ஏலச் சரக்குகள்!
எங்கள் ஏலத் தொகை
-யையும்
நாங்களே தர வேண்டியிருப்
-பது தான்
இங்கே ஆச்சரியம்
விடியலைத் தேடும்
இரவுகள் நாங்கள்
தேவன் வருகையை எதிர்
-பார்க்கும்
கன்யா குமரிகள்
சொர்க்கத்திலா? இல்லை!
திருமணங்கள் கூட இங்கே
லஞ்சத்தில் தானே
நிச்சயிக்கப்படுகின்றன!''

விரக்தியின் விளிம்பில் நின்று தள்ளாடாமல், விடியலின் சிகரத் தை நோக்கி நடை பயிலும் தமிழீ ழப் பெண்ணொருத்தியின் பாடல்

படையணி நகரும் – பெண்
-கள்
படையணி நகரும்
அலைகடலென படைகள்
-வரினும்
பல்லாயிரம் தடைகள்
-வரினும்...

வித்தியாசமாக இருக்கிறதல் லவா?

## காலநிலை

ஒரு இடத்தில் பலஆண்டுகளாக நிலவி வரும் வெப்பநிலை, ஈரலிப்பு, காற்று, சூரியவெளிச்சம் ஆகியவற்றைக் கொண்டதே காலநிலையாகும். உலகில் பல விதமான காலநிலை காணப் படுகின்றது. அடிப்படையாகப் பெரியளவில் ஐந்து விதமான காலநிலைகள், ஒவ்வொன்றிலும் பல உபபிரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றன.

வெப்பமண்டலக் காலநிலை, உபவெப்பமண்டலக் காலநிலை, மத்திய நடுக்கோட்டுக் கால நிலை, நில நடுக்கோட்டுக் காலநிலை, அடிவானக் காலநிலை என்பன அவையாகும்.

கே. விக்கினேஸ்வரன்
சாவகச்சேரி.

கே: புதிய அரசின் அரசியல் தீர்வு குறித்த விருப்பம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இராணுவத்தீர்வு சாத்தியமில்லை என புதிய அரசு உணர்வதால்தான், அரசியல் தீர்வில் நாட்டம் கொண்டுள்ளதாக நான் எண்ணுகிறேன். கடந்தகால அனுபவங்களூடாகவும், யுத்த நிலைமைகள் இராணுவத்தினரின் பின்னடைவுகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டுமே இராணுவத்தீர்வு சாத்தியமில்லை என்பதைத் தாம் உணர்வதாக புதிய பாதுகாப்பு பிரதியமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த பாதுகாப்புப் படையினர் மத்தியில் பேசும்போது ஒரு கட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ளது தமிழ்மக்கள் மட்டுமல்ல, நாட்டின் முழுப்பொருளாதாரமுமே வீழ்ச்சிகண்டு வருகின்றது. இதனால் சிங்களவரும் பாதிப்படைகின்றனர். இதனை புதிய அரசு ஓரளவு உணர்வதாகத் தெரிகிறது.

ம. விமலக்குமார்
கோப்பாய்.

கே: நாட்டில் சமாதானம் ஏற்பட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டால் அதற்கான புகழ் புதிய பிரதமர் சந்திரிகாவைச் சேரும் அல்லவா?

ப: உலகம் ஒரு வித்தியாசமான தலைவி என பிரதமர் சந்திரிகாவை வர்ணிக்கும். தமிழ் மக்கள் மத்தியிலும் அவர் மதிப்பிற்குரியவராக திகழ்வார். ஆனால், எம்மைப் பொறுத்த வரையில் ஒரு யதார்த்தமான உண்மை இருக்கிறது. இது சிங்கள இராணுவத்தால் வெல்லக் கூடிய யுத்தமானால் அரசியல் தீர்வு பற்றிய கதையே வராது. இது வெல்ல முடியாத யுத்தம். அதாவது தமிழர்களை தோற்கடிக்க முடியாத யுத்தம். அதன் காரணமாகவே அரசியல் தீர்வு குறித்து சிங்களத் தலைவர்கள் இப்போது சிந்திக்கின்றனர். இதனை சிங்களப் படைகளால் வெல்ல முடியாத யுத்தமாக மாற்றியவர்கள் விடுதலைப் புலிகள், போராளிகளின் இரும்பையொத்த உறுதிப்பாடும், வீரமும் தியாகங்களுமே இதற்குக்காரணம். இதுதான் வரலாற்று உண்மை. எனவே எல்லாப் புகழும் அவர்களைத்தான் சாரும்.

சு. கலைச்செல்வி
கந்தர்மடம்

கே: வடக்கு – கிழக்கு மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுமானல் சிங்கள மக்கள் எதிர்க்கமாட்டார்களா?

ப: பெரும்பாலான சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இனவாத அரசியல், மத அமைப்புக்கள் தாம் பிரச்சினைகளை தோற்றுவிக்க முயலும். அவை சிங்களமக்கள் மத்தியில் இன எதிர்ப்புணர்வினை தூண்டிவிடலாம்.

எஸ். கதிர்காமநாதன்
கோண்டாவில் மேற்கு.

கே. பொருளாதாரத் தடை ஓரளவு நீக்கப்பட்டு விட்டது. மின்சாரம், போக்குவரத்து தடைகளும், விரைவில் நீங்கும் என்று எதிர்பார்க்கலாமா?

ப: ஏன் அவசரப்படுகிறீர்கள்? பொறுத்திருந்து பார்ப்போமே. தமிழ் மக்கள் போராடத் தொடங்கிய காலகட்டத்தில், இங்கு மின்சாரம், போக்குவரத்து, பொருள்கள் வரவு எல்லாம் இருந்தனவே! நாம் இவைகளுக்காகவா போராடத் தொடங்கினோம். எமது அடிப்படையான சுதந்திரத்திற்காகஅல்லவா போராடத்தொடங்கினோம். மின்சாரம், போக்குவரத்து வசதி, பொருட்கள் வரவு இவைகிடைத்து விட்டால் முழுச்சுதந்திரமும் கிடைத்து விட்டதாக கற்பனை செய்து பார்ப்பது மிகத் தவறான செயலாகும்.

# பகலவன் பதில்கள்

வே. முகுந்தன்
கைதடி

கே. விடுதலைப் புலிகளை சிங்களமக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளும் காலம் வருமா?

ப: அந்தக் காலம் இப்போதே வந்து விட்டது, ஆம். இது குறித்துவிரிவானகட்டுரையொன்றே எழுதலாம். அரச படைகளால் தென்னிலங்கையில் பெரும்பாலான சிங்கள இளைஞர்கள் கொடூரமாக கொல்லப்பட்ட போது– காணாமலாக்கப் பட்ட போது– கைது செய்து துன்புறுத்தப்பட்ட போது– ஒரு பகுதி சிங்கள மக்கள் விடுதலைப் புலிகளை விரும்பத் தொடங்கினர் என்பது உண்மை. இது பகிரங்கமாக சொல்லப்படாத, மௌனமான ஏற்

றுக் கொள்ளல். தம்மைக் கொடுமைப்படுத்தும் படைகளை எதிர்த்துத் தாக்க பலமில்லாத, வழியில்லாத பாதிப்புற்ற அந்த மக்கள் படையினர்விடுதலைப் புலிகளால் தாக்கப்படுவதை, தண்டிக்கப்படுவதை விரும்புகின்றனர்.

அண்மையில் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் எழுதிய கட்டுரையொன்றிலிருந்து சில உதாரணங்களைத் தரலாம்.

மானுடவியல் ஆய்வொன்றில் ஈடுபட்ட சிங்கள மானுடவியலாளர் ஒருவர் பின் தங்கிய சிங்கள கிராமமொன்றில் அறுபதுவயதான ஒருவரைச் சந்தித்து உரையாடிய போது அம் முதியவர் ஒரு கட்டத்தில், 'எப்போதாவது நான் பிரபாகரன் அவர்களைச் சந்திக்க நேர்ந்தால் நீங்களே முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று தான் நான் கூறுவேன், என்று கூறினாராம். இது அந்த மானுடவியலாளரை வியப்பிலாழ்த்தியது.

பூநகரித்தாக்குதல் நடந்த ஒரு சில நாட்களின் பின் கொழும்பு பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளரான ஒருவர் இந்தப் பத்திரிகையாளரிடம் இப்படிக்கூறினாராம் ''இராணுவம் தோல்வி கண்டது மிகவும் நல்லதே. இது இப்படித் தான் நடக்க வேண்டும்.'' விடுதலைப் புலிகள் இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டியிருக்கிறார்கள். எனக்கு கொஞ்சம் கவலை என்னவென்றால் இந்த அப்பாவி பொற்றோரின் பிள்ளைகள் அநியாயமாக செத்துப் போகிறார்கள் அல்லது முடமாகிப் போகிறார்கள் என்பதில் மட்டும் தான்.

இவ்விருவரின் நிலையிலிருந்தும் சிங்கள சமூகத்தின் மனோ நிலையை பெருமளவு அறியமுடிவதாக அந்தப் பத்திரிகையாளர் எழுதுகிறார். அனேகமான சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளினால் அரசபடைகள் தாக்கப்படும்போது அத் தாக்குதல் நியாயமானதென சிங்கள மக்கள் உணர்வதாக அவர் குறிப்பிடுகின்றார். பிரபாகரன் அவர்களையும் விடுதலைப்புலி களையும் குறித்து சிங்கள மக்களிடையே பிரக்ஞை பூர்வமற்ற ஒரு வகையான அனுதாபம் இருக்கவே செய்கிறது எனவும் அவர் தொடர்ந்து எழுதுகின்றார்.

## உயர்ந்த தோற்றமுடைய மக்கள்

உலகில் மிகவும் உயர்ந்த தோற்றமுடைய மக்களை நீங்கள் எங்கு காண்கிறீர்கள்?

மத்திய ஆபிரிக்காவில் போர் நடந்து கொண்டிருக்கும் ருவாண்டா என்னும் நாட்டில் காணலாம்.

கடைசியாகக் கணக்கெடுக்கப்பட்ட போது அதிகமாக துட்சிகளும், குத்தூஸ் இனத்தவர்களும் வாழும் ருவாண்டாவின் சனத்தொகை எட்டு மில்லியன்களாகும். உலகத்திலேயே அதியுயர்ந்த தோற்றமுள்ளவர்கள் துட்சி இனத்தவர்களாகும். துட்சி இனத்தைச் சேர்ந்த ஒரு ஆணின் உயரம் 195.5 சென்றி மீற்றர் (6அடி 5 அங்) களாகும்; ஒரு பெண்ணினது சராசரி உயரம் 177.8 சென்றி மீற்றர் (5அடி 10அங்) களாகும்.

இப்பொழுது ருவாண்டா என அழைக்கப்படும் நாட்டுக்கு அண்ணளவாக 600 ஆண்டுகளுக்கு முன்புவந்த துட்சிகள், அவர்கள் குறைந்தளவினராகவிருந்தாலும் சிறிய தோற்றமுள்ள எளிதில் வசப்படுத்தக் கூடிய குத்தூஸ் இனத்தவர்களை விரைவில் அடிமைப்படுத்தினர். 1959 ஆம் ஆண்டில் கிளர்ந்தெழுந்த குத்தூஸ் இனத்தவர்கள் அரசைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். அப்போது அதிகமான துட்சி இன மக்கள் ருவாண்டாவின் தெற்கிலுள்ள புருண்டி என அழைக்கப்படும் நாட்டிற்கு ஓடினர். அது ஒரு சுதந்திரமான நாடாகும்.

துட்சிகளும், குத்தூஸ் இன மக்களும் மீண்டும் ஒருவரை ஒருவர் தொண்டையை நெரிப்பவர்களாக மாறியுள்ளனர். அண்மைய நாட்களில் ஆயிரக்கணக்கான துட்சிகள் படுகொலை செய்யப்பட்டதோடு நூறாயிரக்கணக்கானோர் துயர் மிகுந்த அந்த நாட்டைவிட்டு ஓடியுள்ளனர்.

மிக நெடிதுயர்ந்த தோற்றமுடைய துட்சி மக்கள் அதிகமான சிக்கல்களை ருவாண்டாவில் எதிர் நோக்குகின்றார்கள்.

நெறிப்படுத்தல்

குழந்தைகள் பிறக்குமுன் தைமஸ் எனும் உறுப்பிலும் ஈரலிலும் நிணநீர்க் குழியங்கள் மிக வும்சிக்கலான நெறிப்படுத்தலுக்குள்ளாகின்றன. நெறிப்படுத்தப்பட்ட கலங்கள் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு பிற பொருளைத் தனித்துவமான முறையில் தாக்கவல்லனவாக உள்ளன. பிற பொருள் எனப்படுவது, எமது உடலிலுள்ள பதார்த்தங்கள் ஏனைய பொருள்களில் ஒன்று எனக் கொள்ளலாம். எம்மைத் தாக்கும் நுண்ணுயிர்களின் உடலிலுள்ளவை, அவை சுரக்கும் நச்சுப்பொருள்கள் என்பன மட்டுமல்லாது எமக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காத மகரந்தமணி போன்றவையும் பிற பொருள்களே. இதைக் கருத்திற் கொண்டு பார்க்கும்போது, உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான பிறபொருள்கள் இருப்பதை உணரலாம். இப் பிறபொருள்கள் ஒவ்வொன்றையும் தாக்கி அழிக்கவல்ல பிறபொருளெதிரியைத் தயாரிக்க வல்ல தனித்தனி நிணநீர்க் குழியங்கள் எமதுடலில் பிறப்பிலேயே காணப்படுகின்றன. பொதுவாக ஒரு பிறபொருளெதிரி, ஒரு பிற பொருளை மட்டுமே தாக்கும். இந்தவகையிலே, பிறந்த குழந்தை இவ்வுலகில் சந்திக்கப்போகும் எல்லா பிறபொருள்களையும் தாக்கி அழிக்கும் வல்லமையை அவைகளைச் சந்திக்கமுன்னரே பெற்று விடுவது உயிரியல் விந்தையாகும்.

இவ்வாறு உலகிலுள்ள அனைத்துப் பொருள்களையும் தாக்கி அழிக்கவல்ல இம்முறை, தனதுடலிலுள்ளவற்றை மட்டும் ஏன் தாக்குவதில்லை? நெறிப்படுத்தல் நடைபெறும்போது பிறபொருள்களை பரீட்சார்த்தமாக குழந்தையின் உடலில் செலுத்தினால் செலுத்தப்பட்ட பொருள்களுக்கு எதிரான நிணநீர்க்குழியங்கள் செயலற்றதாக்கப்பட்டு, பின்நாளில் அப்பிறபொருளுக்கு எவ்வித எதிர்ப்பும் இருக்கமாட்டாது. இத்தகைய ஒரு முறையினாலேயே ஒருவர் தனதுடலிலுள்ள பொருள்களைத்தாக்கி அழிக்காத தன்மையைப் பெறுகின்றார் என நம்பப்படுகின்றது.

நிணநீர்க்குழிய வகைகள்

நெறிப்படுத்தப்பட்ட கலங்களில், ஈரலில் நெறிப்படுத்தப்பட்டவை 'B கலங்கள்' எனப்படுகின்றன. இவை நிணநீர் இழையங்களில் உறங்கு நிலையில் வைக்கப்படுகின்றன. உரிய தூண்டுதல் ஏற்படும்போது முதலில் தன்னை ஒத்த பல கலங்களை உருவாக்குகின்றன. அதில் அரைவாசி மீண்டும் உறங்குநிலைக்குச் செல்ல, மற்றவை பிறபொருளெதிரிகளைச்சுரக்க ஆரம்பிக்கின்றன. பிறபொருளெதிரிகள் குருதியால் உடல் முழுவதும் எடுத்துச்செல்லப்பட்டு, அதைத் தூண்டிய பிற பொருள்களைத் தாக்கி அழிக்கின்றன. தைமஸ்

# நோய் எதிர்ப்புப் பற்றிய அறிமுகம் - 2 -

உறுப்பில் நெறிப்படுத்தப்பட்டவை 'T கலங்கள்' எனப்படுகின்றன. இவற்றில் பல வகைகள் உள்ளன. கொலைகார T கலங்கள் (Killer T cells) B கலங்களைப்போலவே தூண்டப்பட்டதும் பிரிவடைந்து, சில தூங்குநிலைக்கு மீண்டுவிடுகின்றன. மற்றவை பிறபொருளெதிரியைச் சுரக்காமல், அதைத்தனது கல மென்சவ்வில் ஏந்தியபடி நேரடி மோதலுக்காக குருதியுள் செல்கின்றன. மேலும் தாக்குதல் நடைபெறும் இடத்தில் காணப்படக் கூடிய நெறிப்படுத்தாத நிணநீர்க்குழியங்களையும் ''களப்பயிற்சி'' கொடுத்து தாக்குதலில் ஈடுபட வைக்கின்றன. உதவும் T கலங்கள் (Helper T cells) முன்கூறிய இருவகையான நிணநீர்க்குழியங்களையும் தூண்டுவதில் பங்கேற்கின்றன. தடுக்கும் T கலங்கள் (Suppressor T cells) பிற பொருட்களுடனான மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதில் பங்கேற்கின்றன.

நிணநீர்க்குழியங்கள் தூண்டப்படல்

உடலின் எங்கோ ஒருமூலையில் ஏற்படும் தொற்றுக்குக் காரணமான நுண்ணுயிரை அழிக்கவல்ல நிணநீர்க்குழியம் உடலின் எங்கோ ஒரு மூலையில் இருந்தாலும் அதைத் தேடிக்கண்டு தூண்டுவது என்பது மிகவும் சிக்கலான விடயமாகும். தொற்று ஏற்பட்ட இடத்தில் அவற்றைப் பிடித்து அழிக்கும் பெருந்தின் குழியங்கள், எல்லா நுண்ணுயிர்களையும் அழித்துவிடுவதில்லை. சிலவற்றைப் பதப்படுத்தியபின் அவற்றைத் தாக்க வல்ல நிணநீர்க்குழியத்தைத் தேடிச்செல்கின்றன. இத் தேடலிலும் உரிய நிணநீர்க்குழியத்தைத் தூண்டுவதிலும் உதவும் T கலங்களின் சேவையும் அவசியம்.

எயிட்ஸ் நோய்க்கிருமிகள் உதவும் T கலங்களை அழித்துவிடுவதே அவர்கள் எதிர்நோக்கும் பாதிப்பாகும். இவ்வாறு உதவும் T கலங்கள் அற்ற நிலையில் நிணநீர்க்குழியங்கள் செயலிழந்து விடுவதால் வேறு நுண்ணுயிர்கள் தாக்கும் போது அவற்றை எதிர்க்கும் சக்தியை இவர்கள் இழந்து விடுகின்றனர்.

முன்னர் விளக்கியபடி முதல்முறை ஒரு வகைப் பற்றீரியாவினால் தொற்று ஏற்பட்டால், அதைப் பிடித்து, அதற்குரிய நிணநீர்க்குழியத்தை அறிந்து,

அது தூண்டப்பட்டு, செயலில் இறங்க 7–14 நாள்கள் தேவை. ஆனால் இரண்டாம் மூன்றாம் முறையில் இதே நுண்ணுயிரினால் தொற்று ஏற்படும் போது மிக விரைவிலேயே உரிய பிறபொருளெதிரி உருவாக்கப்பட்டுவிடும். சிலசமயங்களில் ஏற்பட்ட தூண்டலின் விளைவாகத் தொடர்ச்சியாகவே பிறபொருளெதிரிகள் சுரக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அவ்வேளையில் அதே நுண்ணுயிர் மீண்டும் தொற்று ஏற்படுத்துவது இயலாததாகும். ஏனெனில் உள்ளே வரும்போதே பிறபொருளெதிரி அதை அழித்துவிடும். எனவே, எமது உடலில் பல கோடிக்கணக்கான பிற பொருளெதிரிகளை உருவாக்கும் வல்லமை இருந்தாலும் ஏற்படும் தொற்றுகளுக்கேற்பவே பிறபொருளெதிரிகள் உருவாக்கப்படும். எனவே நாம் வாழும் சூழலிலுள்ள நுண்ணுயிர்கள் எம்மைத் தாக்குவது கடினம். ஆனால் ஒரு புதிய சூழலுக்குச் செல்லும்போது, அச்சூழலிலுள்ள நுண்ணுயிர்கள் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அவை அறியப்பட்டு, அவற்றுக்குரிய பிறபொருளெதிரிகள் உருவாக்கப்பட்டபின் பயம் இல்லை.

## நோய்த் தடுப்பு மருந்துகளின் பயன்பாடு

பிறபொருளெதிரிகளை உருவாக்கும் வரை தொற்றிய கிருமியை மற்றைய நோயெதிர்ப்பு முறைகள் தடுத்து நிறுத்தாவிட்டால் ஆபத்தாகிவிடும். ஏற்பு வலியை உதாரணமாகக் கொள்ளலாம். காயங்கள் ஏற்படும்போது உட்செல்லும் ஏற்புக்கிருமிகள் இரத்த ஓட்டம் குறைந்த அழுக்குகள் சேர்ந்த இடம் கிடைத்தால்த்தான் பெருகுகின்றன. அவை பெருக ஆரம்பித்ததும் சுரக்கும் நச்சுப்பொருள் உடலில் பரவியதும், தசைகளை இறுகச்செய்கிறது. தொடர்ச்சியாக ஐந்து நிமிடம் நெஞ்சறை சுருங்கிய நிலையிலிருந்தால் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும். ஆனால் முன்னரே வீரியம் அகற்றப்பட்ட ஏற்பு நச்சுப்பொருளை ஊசிமூலம் ஏற்றிவிட்டால், ஏற்புவலி ஏற்படாமல் அதற்குரிய பிற பொருளெதிரியை உருவாக்குவதைத் தூண்டிவிடலாம். இப்போ உண்மையான தொற்று ஏற்பட்டாலும் நச்சுப்பொருள் அதன் பிற பொருளெதிரியினால் உடனடியாகவே அழிக்கப்பட்டுவிடும். இதனால் பயம் இல்லை. இதனாலேதான் தடுப்பு ஊசி ஏற்றுவது மிக மிக முக்கியமானதாகின்றது. எமது சூழலிலுள்ள பல நுண்ணுயிர்களை அழிக்கவல்ல பிறபொருளெதிரிகள் தாய்ப்பாலோடு பிள்ளைக்குக் கிடைப்பதால், பிள்ளைதானே பிறபொருளெதிரிகளை உருவாக்கும் வரை தாய்ப்பால் நோய்ப்பாதுகாப்பைத் தருகின்றது.

## நுண்ணுயிரெதிரி மருந்துகள்

உலகில் காணப்படும் எல்லா நுண்ணுயிர்களும் எமது உடலின் பாதுகாப்புக்களை மீறிப் பாதிப்புக்களை ஏற்படுத்தமுடியாது. ஒருசில வீரியம் கூடிய நுண்ணுயிர்களே தொற்றுநோய்களை ஏற்படுத்தவல்லன. அவ்வாறு தொற்று நோய்கள் ஏற்படும் போதும் வைத்தியர்கள் கொடுக்கும் நுண்ணுயிரெதிரி மருந்துகள், நோயாளியின் நோயெதிர்ப்புச்சக்தி முழுமையாகச் செயற்படுத்தப்படத் தேவையான அவகாசம் வழங்குவதன்றி, தானாக நோயைக் குணப்படுத்த முடியாது. எனவே ஏதாவது காரணத்தினால் நோயெதிர்ப்புக்குன்றிய ஒருவரைப் பாதுகாப்பது மிகவும் கடினம்.

## நோயெதிர்ப்பைப் பாதிப்பன:

எயிட்ஸ்நோய், கதிர்வீச்சுக்கள், இரத்தப் புற்றுநோய் என்பன நோயெதிர்ப்புச் சக்தியை மோசமாகப் பாதிக்கவல்லன. சலரோகம் ஏற்பட்டாலும் நோயெதிர்ப்புச் சக்தி குன்றிவிடுகின்றது. மேலும் நெருக்கடி நிலை தோன்றும் போது உடலில் அதிகம் சுரக்கும் 'கோட்டிசோல்' எனும் ஓமோன் சாதாரண அளவுகளில் பல நன்மைகளைச் செய்தாலும் அதிக அளவில் சுரக்கப்படும் போது நோயெதிர்ப்புக் கருவிகளை முடக்கிவிட வல்லது. இதனால் மனப்பாதிப்புக்கள் ஏற்படும் போது தொற்று நோய்களும் அதிகம் ஏற்படவாய்ப்புண்டு. இன்று கடைகளிலே மிக மலிவாக விற்கப்படும் 'பிறிட்னிசொலோன்' (Pradnisolon) எனும் மருந்து உண்மையில் இந்த ஓமோனே. எனவே உரிய வைத்திய ஆலோசனை இல்லாது இம்மருந்து அதிகம் உபயோகிக்கப்படும் போதும் நோய்த் தொற்றுக்கள் இலகுவாக ஏற்பட வாய்ப்பு உண்டு.

எமது நோயெதிர்ப்புப் பொறி முறைகள்– தோல், நிணநீர்க்குழியங்கள், நிணநீர்க்குழியங்கள், பிறபொருளெதிரிகள்– அனைத்துமே புரதத்தை மையமாகக் கொண்டவை. எனவே புரதச்சத்தும், உயிர்ச்சத்தும் பற்றாக்குறையாக இருக்கும் போது நோயெதிர்ப்பும் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. சமவிகித உணவும் போதிய உடற்பயிற்சியும் நோயெதிர்ப்புச் சக்தியை மேம்படச் செய்கின்றன.

தற்போது அதிகம் பேசப்படும் செப்ரிசீமியா என்பது, கிருமிகள் உடலின் பாதுகாப்பு அரண்களைக் கடந்து பல்கிப்பெருகிக் குருதியையே அழிக்கும் நிலையாகும். போசனைக் குறைபாடும் பாதிக்கப்பட்ட மனநிலையும் ஒரு காரணமாக அமையலாம். போதிய பொருளாதாரவசதியின்மையால் உரிய மருத்துவ வசதிகள் கிட்டாததும், மருந்துகள் பற்றாக்குறையாக இருப்பதும் இன்னுமொரு காரணமாகலாம். மேலும் சரியான முறையில், வைத்தியரின் மேற்பார்வையின்றி உபயோகிக்கும்பிறிட்னிசொலோன்போன்றமருந்துகள்மட்டுமின்றி நுண்ணுயிரெதிரி மருந்துகளும் காரணமாகலாம். நுண்ணுயிரெதிரி மருந்துகளைக் கண்டபடி உபயோகிக்கும் போது, நுண்ணுயிர்கள் அவற்றை

எதிர்க்கும் தன்மை பெற்றுவிடுவதால் அம்மருந்துகள் பயனற்றுப் போகின்றன. எனவே, எமது மக்களின் நோயெதிர்ப்புச் சக்தியைக் கட்டியெழுப்பப் பல நடவடிக்கைகள் தேவைப்படலாம்.

### இயோசின் நாடியும் மூலநாடியும்

குருதி வெண்குழியங்களிலே இயோசின் நாடிகள் மிகக் குறைந்த அளவிலே, ஐந்து வீதத்துக்கும் குறைவாகவே உள்ளன. இவை அதிகமாக பிற பொருள்– பிறபொருளெதிரிகள் தாக்கமுறுவதால் ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்திக்க உதவுகின்றன. மூலநாடிகள் தாக்கம் நடைபெறும் இடங்களில் அழற்சியை அதிகரித்து நோயெதிர்ப்புக்கு உதவுகின்றன.

### நோயெதிர்ப்பு நோயாதல்

இவ்வாறு பல்வேறு வழிகளில் எமக்குப் பாதுகாப்பை வழங்கும் நோயெதிர்ப்பு முறைகள் சில சமயங்களில் தாமே நோய் ஏற்படுத்துவனவாகவும் அமைந்து விடுகின்றன. உதாரணமாக எவ்வித ஆபத்துமில்லாத மகரந்த மணிகள், சில உணவுப் பொருள்கள் போன்றவற்றுக்கும் பிற பொருள் எதிரிகள் உருவாக்கப்பட்டு, தாக்குதல் நடைபெறுகின்றது. இவ்வாறு அவசிய மற்ற விதத்தில் நடைபெறும் தாக்கங்களே 'ஒவ்வாமை' (Allergy) எனப்படுகின்றன. மேலும் இரத்த மாற்றீடு, அங்க மாற்றீடு செய்யும்போதும் இவை உடலில் சேராது எதிர்க்கப்படுவதும் இதே காரணத்தினாலேதான்.

இங்கு, நோயெதிர்ப்பு முறைகள் மிகவும் எளிமையாகவே விளக்கப்பட்டுள்ளன. இவை முழுமையான விளக்கங்கள் அல்ல. எமது வாழ்க்கை நோயெதிர்ப்புச் சக்தியில் எவ்வாறு தங்கியுள்ளது என்பதையும், அதைப் பேணுவதற்கு மனச்சாந்தி, சம விகித உணவு, உடற்பயிற்சி என்பவற்றின் தேவையையும் சுட்டிக் காட்டுவதே முக்கிய நோக்கமாகும்.


றம்மியா மைதிலி களஞ்சியம்

கிளிநொச்சியில் சகலவகையான
வாகன உதிரிப்பாகங்களையும்
ஒரே இடத்தில் நம்பிக்கையுடன்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்

றம்மியா மைதிலி களஞ்சியம்

யாழ் வீதி, கிளிநொச்சி.

யாழ் நகரில்

# குபேரன் களஞ்சியம்

இனிப்பு வகைகள்

பிஸ்கட் வகைகள்

பால்மா வகைகள்

**இவைகளை**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

நினைவில் நிற்கவேண்டிய பெயர்

## குபேரன் களஞ்சியம்

358, 160 கேணல் கிட்டு சாலை யாழ்ப்பாணம்.

# சுதந்திரத்தின் அனைத்துப் பரிமாணங்களிலும் வாழ்வாய்

திலீபன்
அவன் தமிழர் மனங்களில்
சுடர் விட்டெரியும்
தீபம்

சின்னவயதினில்
தாயை இழந்தவன்
தாயகத்தை இழக்கக்கூடாது
என்பதற்காக
தன்னையே இழந்தான்.

வாழ்வின் வசந்தங்களை
வாழும் சொந்த மண்ணிற்காக
புறந்தள்ளி ஒதுக்கியவன்.
இதயம் முழுவதும்
சுதந்திர வேட்கை சுமந்து
இரத்தத் தூறலுக்குள்
நடந்து திரிந்தவன்.

தென்றலின் தீண்டலும்,
இளமாலைப் பொழுதின்
சுகானுபவமும்
இளவேனிற்காலத்து
இனிமைகளும்
இவனுக்குத் தெரியாது.

இடியுடனும்
புயலுடனும்
இரண்டறக்கலந்து
வாழந்தவன்.
விடியலுக்காக
ஒலித்த
வித்தியாசமான
பூபாளம் இவன்

பசி தின்று
பசி தின்று
உயிர்
கொஞ்சம்
கொஞ்சமாக நகர
உறுதி குலையாமல்
உயிர் விட்டவன்

இந்திய மேலாதிக்கத்தை
தலைகுனிய வைத்தவன்
இமய மலையை
மடுவாக்கிக் காட்டியவன்
செல்லரித்துப் போன
வல்லரசின்
இதயத்தை பிரித்து
உலகின் முன்னே
உலுப்பியவன்.


ஏழாண்டுகள்
கடந்து விட்டனவா
திலீபா
நம்ப முடியவில்லையே!
சுதந்திரம் கிட்டும்வரை
மட்டுமல்ல
அது வந்த பின்பும்
அனைத்துப் பரிமாணங்களிலும்
நீ கலந்து வாழ்வாய்

– கிருஸ்ணகுமாரன் –



# ரட்ணம் மருந்தகம்
# பல் பொருள் வாணிபம்

- ஆங்கில மருந்து வகைகள்
- பால்மா வகைகள்
- பிஸ்கட் வகைகள்
- இனிப்பு வகைகள்
- கேக் தயாரிக்கும் மூலப்பொருட்கள்
- குளிர்பானம் தயாரிக்கும் மூலப்பொருட்கள்
- அழகுசாதனப்பொருட்கள்



இவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்

# ரட்ணம் மருந்தகம்
# பல்பொருள் வாணிபம்

358, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

# கேணல் கிட்டு நினைவு

# சிறுவர் பூங்கா

*"என் உயிரினும் மேலான தாய்த்திரு நாட்டை அன்னிய ஏகாதிபத்திய வாதிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதா?"*

ஆம்! ... அன்று வீரமுழக்கமிட்டு தமிழீழ நிலப் பரப்பின் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்தைக் கட்டி ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்கிய சங்கிலியனின் அந்தக் கம்பீரமான சிலை வானளாவ உயர்ந்து நின்றது!

நல்லூரில் அமைந்துள்ள ''கேணல் கிட்டு நினைவுப்பூங்கா'' வின் நுழைவாசலில் நிற்கும் பொழுது வீறுகொண்டு பாய்கின்ற குதிரையில் வாள் ஏந்திய சங்கிலிய மாமன்னனின் அந்த வீரம் செறிந்த பார்வை, பார்ப்பவர்களின் உள்ளங்களையும் ஒரு கணம் வீறுகொள்ள வைக்கும்.


தமிழீழ அரசின் இராஜதானியாக விளங்கிய நல்லூரில் அந்த மாவீரனின்சிலை அமைக்கப்பட்டதும் பொருத்தமானது போல் இருந்தது. அந்த மாமன்னனின் சிலையை ஒருதடவை சிரம் தாழ்த்தி வணங்கிக் கொண்டே, அனுமதிச் சீட்டையும் பெற்றுக் கொண்டு, நுழைவாயிலின் ஊடாக ''கேணல் கிட்டு நினைவுப் பூங்கா''வினுள்காலடி வைக்கின்றேன்.


ஓ... இயற்கையின் அழகியவனப்பும், கண்ணைக் கவரும் பூமரங்களும், குளிர் நிழல் தரும் பெரு விருட்சங்களும், ''சல...சல...'' என்ற நீரோடைகளும்...... துள்ளித் திரிந்து ஆனந்தமாய்க் குதூகலிக்கும் குழந்தைகளும், தம் துயரங்களையும், சுமைகளையும் மறந்து களிப்பில் திளைக்கும் பெரியவர்களும்...... இப்படியே அந்தப் பூங்கா எங்கும் ஒரே கலகலப்பாக இருந்தது!

''சே!... இவ்வளவு செலவழித்து இந்தப் பூங்காவை அமைத்திருக்கின்றார்களே...இந்தப் போர்க்கால நெருக்கடியிலும் இது தேவைதானா?''

என்னுடைய மனம் அந்த மனோரம்மியமான சூழலில் இருந்தும் சிறிது விலகி அசைபோடத் தொடங்கியது.

பாதையின் இரு ஓரங்களிலும், உள்ள பச்சைப் பசேலென்ற புல் படுக்கைகளையும், அழகிய பூ






மரங்களையும் பார்த்தபடியே மெதுவாக நடந்து கொண்டிருந்த எனது மனதிலும் ஏன்தான் இப்படி ஒரு எண்ணம் பிறந்ததோ?


சிறிது தூரம் வரை நடந்து சென்றுகொண்டிருந்த என் கண்முன்னால் கம்பீரமாகத் தோற்றமளித்துக்கொண்டிருந்த, இன்னுமொரு உருவம், என் நடையின் வேகத்தைத் தடுத்து நிறுத்தியது...

ஆம்!... யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து தமிழ் மண்ணின் வீரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டிய ''கேணல் கிட்டு''வின் எடுப்பான தோற்றம், அங்கே நுழைபவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை வீரத்தை ஊட்டுவது போல இருந்தது.

ஒரு விரல் காட்டியபடி, மிகவும் எடுப்பாகத் தோற்றம் அளித்துக் கொண்டிருந்த 'கேணல் கிட்டு'வின் அந்தச்சிலை என்னையே பார்த்து நகைப்பதுபோல் இருந்தது!



''எந்த நெருக்கடியான சூழலிலும், எந்த அழுத்தங்களின் மத்தியிலும் தமிழ் மக்களாகிய நாம் நிலை குலைந்து போகாது உறுதியாக வாழவேண்டும். இது போன்ற சரணாலயங்கள் சிறுவர் பூங்காக்கள் நெருக்குதலுக்கு ஆளான, எங்களுடைய மக்களின் மனங்களைச் செழுமைப்படுத்தும்... போர்ச் சூழலிலேயே வாழ்ந்து, மன அமைதியற்றுத் தவிக்கின்ற எங்களுடைய குழந்தைகளுக்கு உத்வேகத்தையும், உள மகிழ்ச்சியையும், மனவெழுச்சியையும் ஏற்படுத்தும். இது எதிர்கால சமுதாயத்தின் எழுச்சிக்கும் வித்திடும்... எமது ஆடம்பர வாழ்வுக்காகவும், தேவையற்ற களியாட்டங்களுக்காகவும் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கின்றோம்... உளவியல்ரீதியாகவும், உடல்ரீதியாகவும் எழுச்சியைத் தருகின்ற இந்தச் சரணாலயம் தமிழீழத்திற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்... எமது மண் விடியும்போது வெறும் பாலைவனமாக இருக்கக் கூடாது......''



1986ஆம் ஆண்டு, ''பண்டிதர் சரணாலயத்தை'' உருவாக்கி அதனை ஒரு நல்ல இயற்கை வளம் நிறைந்த ஒரு வனமாக உருவகித்துக் கொண்டிருந்த கிட்டு, அன்று கூறிய அந்தப் பொருள் பொதிந்த கருத்துக்கள், என் உள்ளத்தில் மீண்டும், மீண்டும் எதிரொலித்து அலை மோதிக் கொண்டிருந்தது.

ஓ... பரந்த தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்த அந்த மாவீரனின் முன்னால் நிற்கும் என்உடலும் உள்ளமும் ஒரு தடவை கூனிக் குறுகியது.

அன்று! ... அஸ்தமித்துப்போன தமிழ்ஈழத்தின் கடைசி மன்னனாக இருந்து கோலோச்சி வீரச்சாவடைந்த மாவீரன் சங்கிலியனின் உருவம் வரவேற்கின்றது!

இங்கே... உருவாகப்போகின்ற தமிழ் இராட்சியத்தின் மாவீரனான கிட்டுவின் தோற்றம் ஒரு புதிய தேசத்தின் உதயத்தைச் சுட்டிக் காட்டுவது போல் இருக்கின்றது.

என் தலைக்கு மேலாக உள்ள சுமார் இருபது அடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்ட பிரமாண்டமான தொங்குபாலத்தை நிமிர்ந்துபார்த்ததும், என் கண்கள் வியப்பினால் அகலத் திறந்தன.

ஒரு மலை உச்சியில் இருந்து இன்னொரு மலைக்கோ, அல்லது பெரிய ஆறுகள், நீரோடைகளைக் கடப்பதற்காகவோ வெளிநாடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் தொங்கு பாலங்களை எங்களுடைய குழந்தைகள் எப்பொழுதாவது அறிந்திருப்பார்களா?

எங்களுடைய மண்ணிலேயே அத்தகைய ஒரு தொங்கு பாலத்தைக் கண்டதும் என் மனம் குதூகலித்தது.

''எங்களுடைய வளரும் சமுதாயத்திற்கு எதுவும் இல்லை என்ற குறை இந்த மண்ணில் இருக்கக் கூடாது...... வளர்ச்சியடைந்த நாடுகளில் கிடைக் கின்ற வசதிகளும், வளங்களும் எங்கள் மண்ணில் வாழ்கின்ற குழந்தைகளுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்...''

என்ற பரந்த நோக்கத்தில் சிந்தித்த தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையில் உருவான அந்த, எதிர்பார்க்கைகளை நினைத்துப் பார்த்தபொழுது ஒரு கணம் எம் நெஞ்சமெல்லாம் புல்லரித்தது!

அந்த உறுதியான தொங்கு பாலத்தின் மீது குதூகலமாகத் தவழ்ந்தும், ஓடியும் நடக்கின்ற குழந்தைகளையும், சிறுவர்களையும் மட்டுமல்ல, இளைஞர்கள், வயதானவர்கள் எல்லோரையும் பார்க்கும் பொழுது,

''இவர்கள் குண்டுகள் போடும், துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கின்ற மண்ணிலா வாழ்கின்றார்கள்...'' என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது.

அதற்கு அருகே, மிகஉயரமான ஒரு மலையும், அதில் இருந்து ''சல, சல'' என்று வழிந்தோடுகின்ற நீர்வீழ்ச்சியும், கீழே நீரைச் சேர்த்துக் கொண்டு செல்கின்ற நீரோடையும் மிக அற்புதமாக இருந்தது.

மலையின் கீழே சுற்றிச், சுற்றிச் செல்லும் குகையும், அதன் இருபக்கங்களிலும் பொருத்தப்பட்ட வண்ண, வண்ண மீன் தொட்டிகளும் மனோரம்மியமாக இருந்தது.

ஒவ்வொரு மீன் தொட்டிகளினுள்ளும் வகை வகையான மீன் காட்சியகம் (Acquarium) குழந்தைகளுக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்...

அங்கிருந்து விலகிச் சென்று கேணல் கிட்டுவுடன், வங்கக் கடலிலே வீரச் சாவைத் தழுவிய ஒன்பது மாவீரர்களின் உருவப் படங்களையும் பார்த்து, என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, அப்பால் நடந்து சென்ற எனக்கு, வெளிநாட்டில் ஏதோ ஒரு பூங்காவிற்குள் நிற்பது போன்ற பிரமை தான் ஏற்பட்டது.

ஓய்வெடுக்கும் மாடிக் குடில்கள், சிறுவர்களும், பெரியவர்களும் கூட விளையாடிக் கழிக்கும் நிறுத்தாடுவளைகள், ராட்டினங்கள், ஊஞ்சல்கள் சறுக்கும் ஏணிகள் போன்ற விளையாட்டுச் சாதனங்கள், இத்தனைக்கும் களைப்புற்று வந்தால் உல்லாசமாக இருந்து, ஓய்வெடுக்கும் அழகிய வடிவமைப்பிலான மண்டபங்கள், குளிர்களி மற்றும் சிற்றுண்டிகள் விற்பனையாகும் அழகிய கடை,...... இப்படியே ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு சென்ற என் மனதிலே ஒரு இனம் புரியாத மகிழ்ச்சியையும், மன அமைதியையும் அந்தப் பூங்கா தந்து கொண்டிருந்தது.

அங்கே வட கிழக்கு மூலையில் ஒரு கொட்டகையினுள் வைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான சேதமாக்கப்பட்ட ''செயின் டோசர்'' தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்துவமான வீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

அன்னிய ஆக்கிரமிப்பாளர்களின், எந்த ஆயுத பலமும், பாரிய இராணுவ தளபாடங்களும், அச்சுறுத்தும் டாங்கிகளும் விடுதலை உணர்வுடைய மக்களின் ஆன்ம பலத்தின் முன்னால், நிலை கொள்ள

**ந. அனந்தராஜ்**

முடியாது என்பதை அந்த அழிக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட ''செயின் டோசர்'' காட்டிக் கொண்டிருந்தது.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே......''

என்ற இந்திய சுதந்திரக் கவி பாரதியின் வீர வாசகம் எங்கள் இதயங்களையே ஒரு கணம் எழுச்சி பெற வைத்துக் கொண்டிருந்தது.

''ஓ... போர்ச் சூழலின் நெருக்குதலின் மத்தியிலும் வாழ்கின்ற எங்களுடைய மக்களுக்கு இந்தப் பூங்கா ஒரு சஞ்சீவி...''

கேணல் கிட்டு, நினைவுப் பூங்காவில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த என் நெஞ்சத்திலும், உடலிலும் ஒரு புத்துணர்ச்சி ஊற்றெடுப்பது போல் இருந்தது......



# வாழக் கற்றுக் கொள்ளல்

வாழ்ந்திருப்பது அல்லது நிலைத்திருப்பது பற்றி இப்போதெல்லாம் நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆபத்தில்எவ்வாறு தப்பிப் பிழைத்திருப்பது?

இன்றைய அமைப்பில் நாமும் ஒரு மனிதனாக வாழ்வதற்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ளுவது அவசியமாகிறது.

வரலாற்றைக் கண்ணோட்டமிட்டு, உயிர் வாழ்தல் எப்படி நடைபெற்றிருக்கிறது என்று பார்க்கலாம். நிலப்பரப்பில் உயிர்இனங்கள் தோன்றிய காலத்திலிருந்து ஆரம்பித்துப் பார்க்கலாம்.

காலம், காலமாக உயிர் வாழ்வதற்கு இரண்டு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன:

1. இருக்கின்றசூழ்நிலைக்கு சரிசெய்து கொள்ளுதல்.
2. சரி செய்து கொண்ட பிறகு, இருப்பதை மேலும் சிறப்புடையதாக ஆக்கிக் கொள்ளுதல்.

கடந்த காலத்தில் இந்த இரண்டு நடவடிக்கைகள் எப்படி நடந்து இருக்கின்றன என்பதையும் தற்காலத்தில் எப்படி அது செயல்பட முடியும் என்பதனையும் பார்க்கலாம்.

சூழ்நிலைக்கு ஏற்றவாறு சரிசெய்து கொள்ளுதலைப் பற்றி முதலில் பார்க்கலாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு, பரிணாமம் தொடர்ந்த காலத்திலும், தாவரங்களும் சரி, பிராணிகளும் சரி சூழ்நிலைக்குத் தங்களை சரி செய்து கொண்டவை மட்டுமே வாழ்ந்திருக்கின்றன.

வெப்பநிலை, மண்வளம், ஈரப்பசை, வளர்ச்சிக்கான இதர தேவைகள் ஆகியவற்றுக்குச் சரி செய்து கொள்ள முடியாத தாவரங்கள் உயிர் வாழ்ந்ததில்லை. சரிசெய்து கொள்ள முடிந்தவை, உயிர் வாழ்வதற்குத் தேவையான முதல் படியில் அடி எடுத்து வைத்தன.

மிருகங்களின் நிலையும் இதுதான். ஒரே சூழ்நிலையில் பல மிருக இனங்கள் ஒன்றாக வாழ வேண்டியிருந்தது. இந்த நிலையில் பிற மிருகங்களின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடுகின்ற திறமை பெற்றவைகளும், மற்ற மிருகங்களை வெல்லக் கூடியவைகளும் அல்லது அமைதியாக இணைந்து வாழக் கற்று கொண்டவைகளும் மட்டுமே உயிர் பிழைத்தன.

சூழ்நிலைக்குச் சரிசெய்து கொண்டபிறகு தோன்றுகின்ற இரண்டாவது கட்டம், இருப்பதைத் தொடர்ந்து சிறப்புடையதாக ஆக்கிக் கொள்ளுவதாகும். இதைக் காட்டுச் சட்டம் என்று கூறலாம். இது உயிர்வாழ்தலில் அடிப்படை விதியும் ஆகும். உயிர் வாழ்தல் என்பது, சரி செய்து கொள்ளுதலைப் பொறுத்த விஷயம் மட்டுமல்ல, இருப்பதை மேலும் சிறப்பானதாக ஆக்கிக் கொண்டு போட்டியைச் சமாளிப்பதும் ஆகும்.

உதாரணமாக, ஒரு அழகிய சிறிய மலர் பருவகால சூழ்நிலைக்கு ஏற்ப தன்னைச் சரிசெய்து கொள்ளும் ஆற்றல் பெற்றதாக இருக்கலாம். ஆனால் பெரிதாகவும், கனமாகவும், விரைந்தும் வளரக்கூடிய இதர தாவரங்களால் அமுக்கப்பட்டு அழிந்து போகலாம். ஆகவே அந்த மலர் உயிர் வாழவேண்டுமானால் இவற்றைத் தாக்குப் பிடிக்கும் சக்தியை அது வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது.

ஒரு மிருகம் இயற்கைச் சூழ்நிலைக்கும், இதர மிருகங்களோடு இணைந்து வாழ்வதிலும் தன்னைச் சரிசெய்துகொள்ளும்போது, தற்காலிகமான உயிர் வாழ்க்கையை அது பெறக்கூடும். ஆனால் போட்டியிடும் மிருகங்களுக்கு இணையாகவோ, அல்லது அதிகமாகவோ அது தன்னுடைய சக்தியை வளர்த்துக் கொள்ளத் தவறி விடுமானால் சீக்கிரமே தாழ்ந்த நிலையினை அடைந்து போட்டியில் வாழ முடியாத நிலையைப் பெற்றுவிடுகிறது.

தாவரங்கள், மிருகங்கள் ஆகியவற்றின் பரிணாம வரலாற்றைப் பார்க்கும்போது, உயிர் வாழ்வதற்கான முன்னர் குறிப்பிட்ட இரண்டு நிலைகளும், நிலப்பரப்பில் உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அவசியமானதாகவே இருந்து வந்திருக்கின்றது.

ஆகவேஇந்தக் காலத்தில் உயிர்வாழத் தேவையான இரண்டும் பல்வேறு சூழ்நிலைக்கும் எவ்வாறு பொருந்துகிறது என்பதை உங்களை உதாரணமாக வைத்தே பார்க்கலாம்.

உயிர் வாழ்வதற்குத் தேவையான முதல் நிலை, சூழ்நிலைக்குச் சரிசெய்து கொள்வதாகும். உங்களின் குடும்பம், வசிக்கும் இடம், தொழில் வர்த்தகம் ஆகிய எதிலும்—எந்தச் சமயத்திலும், நீங்கள் பொருத்தமானவராக, சரிசெய்து கொள்கின்றவராக, ஒத்துழைப்புக் கொடுக்கின்றவராக, இருப்பதை ஏற்றுக் கொள்ளுகின்றவராக, உங்களை வைத்துக் கொள்வது அவசியமாகிறது.

உயிர் வாழ்தல் என்று சொல்லுகின்றபோது, உயிருடன் இருத்தல் அல்லது இறந்து போதல் என்பது பொருளல்ல. சில சமயங்களில் அதுவும் நேரலாம். உயிர் வாழ்தல் என்பது பயனுடைய, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய இணக்கமான மனிதராக வாழ்வது என்பதுதான்.

முதலில் நீங்கள் பொருந்த வேண்டும். சரி செய்து கொள்ள வேண்டும். ஒத்துழைக்க வேண்டும், பங்கேற்க வேண்டும். நடைமுறையை ஏற்க வேண்டும்–குடும்பத்தாருடன், அக்கம்பக்கம் வசிப்பவர்களுடன், உத்தியோகத்தில், வர்த்தகச் சூழ்நிலையில், ஆம், அனைத்திலும்! மற்றவர்கள் உங்களை ஏற்றுக் கொள்ளும்படியாக முதலில் நீங்கள் உங்களைச் சரி செய்து கொள்ள வேண்டும். இது இணக்கமான சூழ்நிலையில் உங்களை வைக்கும். வேறுவிதமாக நீங்கள் நடந்து கொண்டால் உங்களை மற்றவர்கள் ஏற்கமாட்டார்கள். எதிர்ப்பைத்தான் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொல்லைகளை அறுவடை செய்வீர்கள்.

சூழ்நிலைக்குத் தேவையானபடி நீங்கள் அனுசரித்து நடக்கும்போது, வரவேற்கத் தக்க மனிதராக சமுதாயத்தில் இடம் பெறுகிறீர்கள். இப்போது உயிர் வாழ்தலின் இரண்டாவது நிலையில் கவனம் செலுத்தலாம்.

அதாவது உங்களிடம் இருப்பதை மேலும் சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம்.

இரண்டாவது நிலையை தகுந்த உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். உங்கள் தொழில் நிர்வாகப் பொறுப்புக்கு நீங்கள் பதவி உயர்வு பெற்றுவிட்டதாக வைத்துக் கொள்வோம். புதிய சூழ்நிலைக்கு உங்களைச் சரி செய்து கொள்ளாமல் நீங்கள் உங்கள் பணியைத் தொடங்கினால் உங்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அனுசரணையாக நீங்கள் நடக்காமல் போனால் – அந்த நிர்வாக அமைப்பில் பணியாற்றுகின்ற மற்றவர்கள் ஏற்கின்ற நிலைக்கு உங்களை நீங்கள் சரிசெய்து கொள்ளாமல் போனால் – புதிய பொறுப்பில் நீங்கள் 'உயிர் வாழ' முடியாது. ஏனென்றால், சூழ்நிலைக்குச் சரி செய்தல் என்கிற முதல் நிலைக்கு முரணாக நீங்கள் செயல்பட்டு விட்டீர்கள்.

அப்படி அல்லாமல் வாழுவதற்குத் தேவையான முதல் கோட்பாட்டின்படி நீங்கள் நடப்பதாக வைத்துக் கொள்ளுவோம். புதிய பொறுப்பின் சூழ்நிலைக்கு உங்களை சரிசெய்து கொண்டு விடுகிறீர்கள். உங்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடாக நடந்து கொள்ளுகிறீர்கள். நிறுவனத்தின் கொள்கைக்கு முழுமையான ஒத்துழைப்புத் தருகிறீர்கள். நிறுவனத்தின் நடவடிக்கை அனைத்திலும் உற்சாகமாகப் பங்கு பெறுகிறீர்கள். அப்போது அந்த நிறுவனத்தில் வரவேற்கத்தக்க ஒரு மனிதராக நீங்கள் ஆகி விடுகிறீர்கள். புது உத்தியோகத்தில் 'உயிர் வாழும்' தகுதி இயற்கையாகவே உங்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து, உயிர் வாழ்தலுக்குத் தேவையென்று நிரூபிக்கப்பட்டுவிட்ட முதல் கோட்பாட்டினை நீங்கள் அனுசரித்து நடந்ததுதான் காரணம்.

இப்போது இரண்டாவது கோட்பாட்டினை பயன்படுத்தும் நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். சூழ்நிலைக்கு உங்களைச் சரிசெய்து கொண்ட பிறகு, உங்களிடம் இருப்பதை மேலும் சிறப்பாக்கிக் கொள்வது அவசியமாகிறது. உங்கள் வேலைத் திறமையை வளர்த்துக் கொள்ளுகிறீர்கள். நிர்வாகத்தோடு உங்களுக்கு உள்ள உறவை மேலும் பலப்படுத்திக் கொள்ளுகிறீர்கள். 'நான் மேலும் எப்படிச் சிறப்பாகச் செயல்பட முடியும்' –இதை உங்கள் குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

எதற்கும் ஒத்துப் போகாதவர்கள் மற்றவர்களின் கவனத்தைத் தங்கள் மீது திருப்புவதில் வெற்றி பெறலாமே தவிர, மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையைப் பெறுவது முடியாது. தங்களை மற்றவர்கள் மீது திணிப்பவர்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள படிப்பினைகளை ஏற்க மாட்டார்கள்.

நிலப்பரப்பில் உயிரினங்கள் தோன்றிய போதே உருவான நிலைகள் இன்றைக்கும் செல்லுபடி ஆகக் கூடியவையாகவே இருந்து வருகின்றன. ஆகவே இவற்றை நீங்கள் கவனமுடன் பரிசீலிப்பது அவசியம். இந்த நிலைகளை வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களிலும் நீங்கள் பரிசீலித்துப் பார்த்தது உண்டா?

சூழ்நிலைக்குச் சரி செய்து கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் வாழுகின்ற சமுதாயம் அல்லது அமைப்பில் நடமுறைக்குக் கட்டுப்படுங்கள். இவற்றைச் செய்தபிறகு உங்களிடம்உள்ளதை மேலும்சிறப்பானதாக ஆக்கிக்கொள்ள தொடர்ந்து முயலுங்கள்.



மாணவர் ஆக்கம்

# சிறையில் வாடாத
# () கறுப்பு மலர் ()

10.05.94ஆம் திகதியன்று தென்னாபிரிக்காவில் ஓர் பெரிய முக்கிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. 342 ஆண்டுகளாக வெள்ளையர் ஆதிக்கத்திற்குப்பின் கறுப்பரான நெல்சன் மண்டேலா அன்றுதான் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்தார். கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தும் போராட்ட குணம் மாறாத தென்னாபிரிக்க மக்களின் அன்புத் தலைவர் நெல்சன் மண்டேலாவிற்கு அவரது மக்கள் இட்ட அபிமானப் பெயர் ''கறுப்புமலர்'' (The Black Pimperne) என்பதாகும். 'நெல்சன் ரோலி ஹாலா மண்டேலா' இதுதான் அவரின் முழுப்பெயர். நெல்சன் மண்டேலா அவர்கள் 1918 யூலை 18 இல் தென் ஆபிரிக்காவின் டிரான்ஸ்காய் பகுதியில் அம்சுட்டா என்னும் ஊரில் கோசா பழங்குடியினரின் தெம்பூ அரச குடும்பத்தில் பிறந்தார்.

1962ம் ஆண்டு இன ஒதுக்கல் அரசின் குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப்பட்ட மண்டேலா அவர்கள் 27 ஆண்டுகளாக கம்பிச் சிறைக்குள் தன் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தினார். 1912 ஜனவரி 8 இல் கறுப்பின மக்களின் உரிமைகள் அடக்கப்பட்டு அடிமையாக நடாத்தப்படும் நிலையை நீக்கிட ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் (A.N.C.) உதயமானது. பல நெடுங்காலமாக அடிமைகளாக வாழ்ந்த கறுப்பின மக்கள் ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் புதிய விடியலை நோக்கிய பாதைக்கு முழுமையான ஆதரவினை வழங்கினர். இதன் பயனாக கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் முனைப்படைந்தது. புதிய உத்வேகம் கொண்டது.

தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைக்காகவே தன்னை அர்பணித்த மண்டேலா அவர்கள் ''இன்னலும் தியாகமும் போர்க்குணம் வாய்ந்த செயலும் இல்லாமல் சுதந்திரம் பெறமுடியாது. போராட்டமே எனது வாழ்க்கை, எனது காலம் முடிகின்றவரைக்கும் சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடுவேன்'' என்று கூறினார். சிறையில் இருந்த மண்டேலாவே நிறவெறிக் கொள்கைக்கு பெரும் ஆபத்தாக விளங்கினார். அத்துடன் மண்டேலாவின் செல்வாக்கும் பெருகியதேதவிர யாரும் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு ஓடிவிடவில்லை. மண்டேலா அவர்கள் தமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள்பற்றி சிறையில் இருந்தபோது பின்வருமாறு கூறினார்.

''என் சுதந்திரத்தைப் பெரிதும் மதிக்கின்றேன். ஆனால், அதைவிடவும் உங்கள் சுதந்திரத்திற்காகவும் கவலைப்படுகிறேன். நான் சிறைப்பட்டதிலிருந்து எத்தனையோ பேர் உயிரிழந்திருக்கிறார்கள். எத்தனையோ பேர் சுதந்திரத்தை நேசித்து இன்னலுற்றிருக்கிறார்கள்... ஆனாலும் விடுதலைபெற்று வெளியேவரவேண்டும் என்பதற்காக எனது பிறப்புரிமையையும் நான் விற்கத் தயாரில்லை. மக்களின் பிரதிநிதியாகவும் தடை செய்யப்பட்ட உங்கள் ஸ்தாபனமாகிய ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் பிரதிநிதியாகவும் நான் சிறையிலிருக்கிறேன்.''

நடுவயதில் சிறையில் தனது வாழ்நாளைத் தனிமையில் கழித்துவிட்டு முதியவயதில் விடுதலையான மண்டேலா இப்போது தனது சொந்த வாழ்க்கையிலும் தனிமைப்பட்டிருக்கின்றார். மண்டேலாவின் தனி வாழ்வு பற்றி பத்திரிகைகள் மட்டுமின்றி பலதரப்பட்ட மக்களும் அடிக்கடி குறிப்பிட்டு வருவது வழக்கமாகி விட்டது. 75 வயதான அவர் மனைவியான வின்னியை கடந்த இரண்டு வருடகாலமாகப் பிரிந்தே இருக்கிறார். அதேசமயம், வின்னி மண்டேலா, தற்போது கணவரிடமிருந்து ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் மக்களிடமிருந்து ஒதுக்கப்படவில்லை. மீண்டும் ஆபிரிக்க தேசியக் காங்கிரசில் இடம் பெற்றிருக்கிறார். பெண்கள் பிரிவின் தலைவியாகவும் அவர் தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார். அது மட்டுமின்றி ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் வேட்பாளராக வெற்றி பெற்ற அவர் மண்டேலா அமைச்சரவையில் ஒரு உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மண்டேலாவின் தேசிய ஒற்றுமை அரசாங்கம் உலகுக்கு ஒரு முன் உதாரணமாக உள்ளது. சமூகத்தின் சகல இனத்தவர்களுக்கும் அமைச்சரவையில் அவர் இடமளித்து இருக்கிறார்.

ச. சிறீபிரியா, ஆண்டு 9
இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ஆபிரிக்கக்கண்டத்தில் தென் ஆபிரிக்காவே மிகவும் சக்திவாய்ந்த நாடாக விளங்கி வந்திருக்கிறது. இனியும் அது அப்படியே இருக்கும் என்பதற்கு அதன் மூலவளங்கள் அத்தாட்சியாக உள்ளன. ஆனால் பல நூற்றாண்டுகளாக பின்தங்கி விட்ட கறுப்பர்களைக் கைதூக்கி விடும் மகத்தானபணி புதிய ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் இருப்பிடம், கல்வி, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உயர்த்தும் இப்பணி இலகுவானதல்ல. மண்டேலா ஆட்சி அதற்கு உரிய முறையில் அத்திவாரம் இடும் என்பதில் ஐயமில்லை!

## உங்களுக்குத் தெரியுமா?

- ''நைல் ஷிப்போ பொட்டாஸ்'' என்பது எகிப்தில் உள்ள மிருகத்தின் பெயர் ஆகும். அதன் தோல்கள் இரண்டரை சென்ரி மீற்றர் கனம் இருக்கும். உலகில் இவ்வளவு கனமான தோல் உள்ள மிருகம் எதுவும் இல்லை.
- மிகப் புராதன மனிதனின் பாடமாக்கப்பட்ட சிதைவுகள் (Fossils) இமயமலைச் சரிவில் உள்ள சிவாலிக் குன்றுகளில் அகழ்வாராச்சியின்போது கிடைத்தன. Fossil Evidence என்று கூறப்படும் இது Australo Pithecus வகை மனித இனத்தைச் சேர்ந்தது. 90 லட்சம் முதல் 140 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் பாடமாக்கப்பட்ட உடற்சிதைவாகும் இது.
- உலகிலேயே மிகப்பெரிய கால்பந்தாட்ட மைதானம் தென் அமெரிக்காவில் பிரேஸிலில் உள்ள ரியோடி ஜெனேரியோவில் உள்ளது. அதில் 2,05,000 பேர் உட்கார்ந்து பார்க்க வசதியுண்டு.
- இலங்கையில் ஒரு நிமிடத்திற்கு இராணுவச் செலவு 793 ரூபா ஆகும்.
- Zoology — விலங்குகளைப்பற்றிய அறிவியல்
  Oology — முட்டைகளைப் பற்றிய அறிவியல்
  Entemology — பூச்சிகளைப் பற்றிய அறிவியல்
  Herpetlogy — ஊர்வன பற்றிய அறிவியல்
  Nephology — மேகம் பற்றிய அறிவியல்
  Ophiology — பாம்புகளைப் பற்றிய அறிவியல்
  Patamology — நதிகளைப் பற்றிய அறிவியல்
  Anemology — காற்றுக்களைப்பற்றிய அறிவியல்
  Dendrology — மரங்களைப் பற்றிய அறிவியல்

தொகுப்பு:- சு. தயாசிறி
ஆண்டு - 12
மன். முருங்கன் மகா வித்தியாலயம்.

## 12 மொழிகள் தெரிந்த பாரதியார்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் ... என்று பாரதியார் பாடினாரல்லவா? அப்படியென்றால் அவருக்கு என்னென்ன மொழிகள் தெரிந்திருந்தன. தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு, வங்காளி, ஜேர்மன், லத்தீன், உருது, அரபி, தெலுங்கு, மலையாளம். ஆகிய 12 மொழிகள் தெரிந்திருந்தன.

தொகுப்பு:- செல்வி சுகந்தி குணரத்தினம்
ஆண்டு 8 C
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

## தேசிய வீரன் ஒரு நாய்

எங்கு தெரியுமா? சுவிட்சர்லாந்திலே தேசிய அரும்பொருள் காட்சியகத்தில் பாரி என்ற நாயின் சிலை உள்ளது. அதன் வாழ்நாளில் அது 40 மனிதர்களைக் காப்பாற்றியுள்ளது. 1800 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த செயின்ட் பெர்னார்ட் இனத்து நாயான இதற்கு ஆறறிவு இருந்தது அதிசயம்! பார்க்க கேட்க முடியாத தூரத்திலும் அங்கு மனிதர்கள்ஆபத்திலிருக்கிறார்கள் என்று உணர்ந்து ஓடிச்சென்று உதவுமாம் பாரி. சுவிஸ் அல்ப்ஸ் மலையில் அவலாஞ்சி எனப்படும் பனிப் பாறை சரிந்து விழும் விபத்துக்கள் நிகழும். பிரயாணிகள் இந்த அவலாஞ்சியில் அகப்பட்டுக் கொள்ளாது காப்பாற்றுவது செயின் பெர்னாட் இனத்து நாய்கள் தான். இதில்பாரி வீராதி வீரனாக விளங்கியதால் தேசிய வீரனாக விருது பெற்றிருக்கிறான்.

மௌ. மதுவர்மன், ஆண்டு 9 'A'
மு/ வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை.




## கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றார்

'சாளரம்' நடாத்திய 'மாணவரும் சமூகமும்' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் செல்வன் யு. ஜேம்ஸ் ரஜீவன் ஆயிரம் ரூபா பரிசினைப் பெற்றார். கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆண்டு 13 இல் பயிலும் மாணவர். சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற துறைகளில் ஆர்வமுள்ளவர். 'சாளரம்' இவரைப் பாராட்டி வாழ்த்துகிறது.

மக்கள் நலன்கருதி மானிப்பாயில் அமைந்துள்ள

## ஓர் வைத்தியநிலையம்



சகல நோய்களுக்கான சிகிச்சையும்

சத்திரசிகிச்சையும்

இங்கு மேற்கொள்ளப்படும்

நாடுங்கள்

# மெடிபிளக்ஸ் வைத்திய நிலையம்

(ஆங்கில வைத்தியம்)

சந்தையடி - மானிப்பாய்

## தெறிப்பு

### அருமையான இதழ்

தங்கள் சாளரத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் அருமையிலும் அருமை.

கடந்த இதழ் அறிவியலையும் தேசிய உணர்வையும் தேனுடன் கலந்த தினைமாவென எமக்களித்தது.

பரீட்சையை எதிர்நோக்கவுள்ள எமக்கு, ''பரீட்சைகளை வெற்றிகொள்வோம்'' என்ற கட்டுரை மிகவும் பயனுள்ளதாய் அமைந்தது.

கடந்த இதழில் சில தலையங்கங்கள் கணனி மூலமாகவா வடிவமைக்கப்பட்டன?

அறிவுலகம், ஆங்கிலம் கற்போம் என்பன இதழுக்கு இதழ் புதுப்பொலிவு பெறுகின்றன.

சாளரத்தின் வளர்ச்சிக்கு எம் இதய பூர்வமான வாழ்த்துக்கள். நன்றி.

*யோ. சிவராஜ், தாவடி வடக்கு கொக்குவில்.*

### வியக்கும் வண்ணமானது

சாளரத்தின் பல இதழ்களின் பின்பு, அதனுடன் மீண்டும் கடித வாயிலாக தொடர்பு கொள்கின்றேன். அதற்குக் காரணமாக இருந்தவை அதன் மூன்றாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழும், அதன் வெளியீட்டு விழாவும் தான்.

இதுவரை 27 இதழ்கள் வெளிவந்துள்ள சாளரம் இதழின் ஆரம்ப இதழ் தொடக்கம் தவறாது வாங்கி வாசித்து வரும் வாசகன் என்ற வகையில் என்றுமில்லாத நிறைவை இந்த மூன்றாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் தந்துள்ளது என்றால் மிகையாகாது.

மிகவும் அற்புதமாக, சிறப்பாக, வியக்கும் வண்ணம் அமைந்துள்ள இந்த இதழின் அட்டை அமைப்பு போலவே அதன் உள் அமைப்புக்களும் சிறப்பாக இருக்கின்றன. அதே போல் சிறப்பிதழ் தாங்கி வந்த, சங்கென ஒலிக்கும் சாளரத்திருவே! வாழி என்ற எமது தமிழீழக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதை தொடக்கம் உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி தொடர்பான கடைசிக் கட்டுரை வரை என இந்த இதழில் இருந்த அனைத்து படைப்புக்களுமே நன்றாகவும், சிறப்பாகவும் மிகுந்த பயனுள்ளதாகவும், தரமானதாகவும் இருந்தது. ருவாண்டா இனப் படு கொலைகள் தொடர்பான கட்டுரையில் படங்களையும் சேர்த்திருந்தது கட்டுரைக்கு மேலும் அழகூட்டியுள்ளது.

இறுதியாக நான்காவது ஆண்டினுள் கால் பதித்துள்ள சாளரம் இதழ் புதிய ஆண்டில் மேலும் பல்கிப் பெருகி, ஓங்கி உயர்ந்து இன்னும் சிறப்பாக வெளிவர வாழ்த்தும் அதே வேளை, இந்த சிறப்பிதழை போலவே இனிவரும் இதழ்களும் தரத்திலும் சுவையிலும் மாறுபடாமல் வெளிவருவதை விரும்புகின்றேன்.

வாசகர்கள் கணிசமான அளவில் கலந்து கொள்ளவில்லை என்பதற்கு பல காரணங்கள் இருக்கவே செய்கின்றன. எல்லாவற்றையும்விட வெளியீட்டு விழா குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டதால் அது தொடர்பான செய்தி சரியான முறையில் வாசகர்களை எட்டவில்லை என்பதே பிரதான காரணமாக இருக்கலாம். ஆனால் சாளரம் இதழைப் போலவே வெளியீட்டு விழாவும் சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. கூறப்பட்ட கருத்துக்கள், உரைகள் எல்லாமே எமது அறிவுக்கு தீனி போட்டன. ஒரே ஆனந்தமாக இருந்தது.

*அன்பு வாசகன் கி. செல்மர் எமில் ஊர்காவற்துறை.*

### எனது கருத்து

சாளரத்தை வாசிப்பதன் மூலம் பல அறிவியல் உண்மைகளையும், மாணவர்களாகிய எமக்கு புரியாத பலவற்றையும் புரிந்துள்ளோம். இதற்கு நன்றி. மேலும் சாளரத்துடன் ''நாட்டில்நடப்பவை'' என்ற சிலவற்றையும் ஒரு தனிப்பாகத்தில் கொடுக்கலாம் என்பது என் சிந்தனை. மிகுதி உங்கள் சிந்தனையாகட்டும். அத்துடன் பக்கத்தின் முடிவில் 'பொன்மொழி'களையும் இடலாம் என்பது எனது கருத்து.

*ஆரூரான் காசிலிங்கேசன், ஆண்டு – 13 வர்த்தகப் பிரிவு, மு/மல்லாவி மகா வித்தியாலயம்.*

# கரப்பந்தாட்டம் (Volleyball)

குறைந்த செலவோடு மைதான வசதிகளைக் குறிப்பிட்ட அளவிற்குள்ளே அமைக்கக் கூடிய தாகவுமுள்ள இவ் விளையாட்டு எமது பிரதேசத் தின் சூழ்நிலைக்கும் சுவாத்தியத்திற்கும் மிகவும் பொருத்தமானது. இன்று உலகத்தில் 150 கோடிக்கு மேற்பட்டவர்கள் இவ் விளையாட்டில் தங்கள் ஈடுபாட்டினைக் காட்டிவருகிறார்கள்.

சர்வதேச மட்டத்தில் மிகவும் பிரபல்யமான இவ்விளையாட்டு 1895 ம் ஆண்டு வில்லியம் மோக னால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அமெ ரிக்க மாசுசெட் மாநிலத்தில் உடற்கல்வித்துறை பணிப்பாளராக இருந்த இவர் இந்த விளையாட் டினை வயதுபோனவர்கள் தங்கள் உடற்பயிற்சிக் காக செய்வதற்கு ஏற்றவிதத்தில் ஒழுங்குபடுத்தி னார்.

ஒரு இறப்பரினால் செய்யப்பட்ட பந்தை இரண்டு கம்பங்களுக்கிடையே குறிப்பிட்ட உயரத் தில் கட்டப்பட்ட வலைக்கு மேலாக எறிந்து, அடித்து செலுத்தி விளையாடினார்கள். இதனைத் தொடர்ந்து இவ் விளையாட்டின் விதிமுறைகள் வரையறுக்கப்படத்தொடங்கின. மைதானத்தின் அளவு, வலையின் உயரம், பந்தின் அளவு, விளை யாடுபவர்களின் (அணியின்) எண்ணிக்கை, புள்ளி எண்ணும் முறை போன்ற பல்வேறு விடையங்கள் விதிமுறைகளாக ஒழுங்குபடுத்தப்பட்டன.

இவ் விளையாட்டிற்கான சர்வதேச கரப்பந் தாட்டச் சம்மேளனம் 1947ல் உருவாக்கப்பட்டது. 175 க்கு மேற்பட்ட நாடுகள் இச் சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன. 1949 ல் சர்வதேச மட்டத்தில் ஆண்களுக்காகவும் 1952 ல் பெண் களுக்காகவும் போட்டிகள் நடத்தப்பட்டன. இரண்டு போட்டிகளிலும் ரஷ்யாவே முதலிடத் தைப் பெற்றது.




இவ்விளையாட்டு இலங்கையிலும் மிகவும் பிர பல்யமானது. 1952 ஆம் ஆண்டு இலங்கைக் கரப் பந்தாட்டச் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. அத னைத் தொடர்ந்து பல்வேறு சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கரப்பந்து விளையாடும் கழகங்கள், பாடசாலை அணிகள் பல்கிப்பெருகின. ஆண், பெண், இருபாலாரும் இப்போட்டியில் பெரும் அக்கறை காட்டி வருகிறார்கள்.

எமது பிரதேசத்தில் கரப்பந்தாட்டம் கிரா மப் புறங்களிலே மிகவும் பிரபல்யமானது. ஆனால் ஆடுபவர்கள் அதிகமாக 'ஓவர்' முறையினையே பின்பற்றுகிறார்கள். இம் முறையினது விதிமுறை கள் கிராமத்திற்குக் கிராமம் மாறுபட்டும் ஒழுங்கு படுத்தப்படாமையும் இவ்விளையாட்டின் வளர்ச் சிக்கு பெரும் இடைஞ்சலாக இருக்கிறது. 'செற் அப்' முறைதான் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

இவ்விளையாட்டில் இப்போது மிகவும் சுறு சுறுப்பும், விழிப்புணர்ச்சியும், தர வளர்ச்சியும் எமது வீரர்களிடையே அதிகரித்துக் காணப்படு கிறது. ''செற்அப்'' முறையிலான சுற்றுப் போட்டிகள் அதிகரித்து வருகின்றன. இதற்கு உறு துணையாக யாழ். மாவட்ட விளையாட்டு அபி விருத்திக் குழுவும் பாடசாலை மட்டங்களில் யாழ். மாவட்டப் பாடசாலையின் விளையாட்டு அபி விருத்திக் குழுவும் பல்வேறு உதவிகளைப் புரிந்து ஊக்குவிக்கின்றன.

இறுதியாக யாழ். மாவட்டப் பாடசாலை களுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற் றுப்போட்டி மிகவும் நல்ல தரத்தினையும், விறு விறுப்பாகவும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. 17,19 வயதுப் பிரிவில் இரண்டு முதலிடங்களை யும் யாழ். மத்திய கல்லூரி அணிகள் தட்டிச் சென்றன.

யாழ். மாவட்ட பாடசாலையின் விளை யாட்டு அபிவிருத்திக் குழுவினால் வழங்கப்பட்ட லெப். கேணல் நீகனின் நினைவு வெற்றிக் கேட யமும், லெப். கேணல் ஜேம்ஸ் நினைவு வெற்றிக் கேடயமும், முறையே 17, 19 வயதுப் பிரிவின ருக்கு வழங்கப்பட்டன. பொதுவாக கரப்பந் தாட்ட விளையாட்டிற்கு ஒளி மயமான எதிர் காலம் இங்கு தெரிகிறது.

அ. நிருஷன்

பிறிசில் நிஸோடில் நடைபெறும் அமெரிக்க ரென்னிஸ் போட்டியில் முன்னைய சாம்பியன் ஸ்ரெபிகிறாவ் படுதோல்வி அடைந்துள்ளார். அலெரன்ஸா சான்ஸா விக்காரியோ அவரை தோற்கடித்துவிட்டார். இது சான்ஸா விக்காரியோ விற்கு கிடைத்த முதல் அமெரிக்க வெற்றி. கிறாவ் முதல் சுற்றில் 6: 1 என்று 22 நிமிடத்தில் வெற்றி பெற்றபொழுது ஸ்ரெபிக்கே வெற்றி கிடைக்கும் என்று அனைவரும் கருதினார்கள். ஆனால் தொடர்ந்து ஆட்டங்களில் சான்ஸா விக்காரியோ சுதாகரித்துக்கொண்டு உறுதியுடன் முன்னேறினார். 1: 6, 7: 6, 6: 4, என்ற கணக்கில் அவர் வெற்றி பெற்றார். ஸ்ரெபிகிறாவிற்கு அண்மைக்கால மாக காலம் சரியில்லை. விம்பிள்டன் தோல்வி இப்பொழுது அமெரிக்கத் தோல்வி. இந்தப் பந் தயத்தில் கூட முதுகில் வலி, இதனால் சிகிச் சையை நாடவேண்டியிருந்தது. சான்ஸா விக்கா ரியோவிற்கு மகிழ்ச்சிப்பெருக்கு. இந்த வெற்றிக் காக நான் மிகவும் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். ஸ்ரெபி இன்னமும் சிறந்த ஆட்டக் காரர், கொம்பியூட்டர் கணிப்பின் படி அவர் இன் னமும் முதலாம்தர ஆட்டக்காரர்தான். ஆனால் இந்த ஆட்டத்தில் அவரைவிட நன்றாக ஆடி னேன் என்கிறார் சான்ஸா விக்காரியோ.

ஆண்கள் ஆட்டத்தில் ஆந்திரே அகஸ்ரிதான், மாட்டினை அரை இறுதி ஆட்டத்தில் தோற் கடித்தார். அகஸ்ரி, மைக்கல் ஸ்ரெக்ஸ்ஸை இறுதி ஆட்டத்தில் சந்திக்கிறார்.

கிறிஸ்தல் தரசில் நடைபெறும் தடைக்கள உலகப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் ஆபி ரிக்கா தொடர்ந்து முன்னணியில் இருக்கிறது. மருந்து உட்கொண்ட குற்றச்சாட்டுக்கு ஆளாகி யுள்ள பிரிட்டிஷ் பெண் வீராங்கனைகள் சாதனை எதையும் இன்னமும் படைக்கவில்லை.

## கிரிக்கட்

இலங்கையில் நடைபெறும் 04 நாடுகள்பங்கு பெறும்கிரிக்கட் பந்தயத்தில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக ஆடிய இந்திய வீரர் சச்சின் ரெண்டுகார் செஞ்சரி அடித்திருக்கிறார். ஏற்கனவே அவுஸ்திரே லியா, பாகிஸ்தானைத் தோற்கடித்து விட்டது. அந்த ஆட்டத்தின் சுழல் பந்துவீச்சாளர் ஸான் வார்ணே விலை மதிப்பற்ற 30 ஓட்டங்கள் அடித்து 03 விக்கட்டுகளையும் எடுத்து 'மான் ஒவ்த மாச்' விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்திய கிரிக்கட் வீரர் ரவிசாஸ்திரி கிரிக் கட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார். எத்தனையோ கிரிக்கட் போட்டிகளுக்கு கதாநாயகனாக இருந்த வர். அவர் இதுவரை 80 ரெஸ்ற் பந்தயங்களில் ஆடிய ஓல் ரவுண்டர், 3500 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தவர், 150 விக்கட்டுக்களை வீழ்த்தியவர், ஒரே ஓவரில் 06 சிக்ஸர்களை அடித்தவர், கார்பீல்ட் சோபர்ஸ் மட்டுமே இச் சாதனையை முன்பு புரிந்த வராவர். இனி அவரை தொலைக்காட்சி வர்ண னையாளராகக் காணலாம். சுனில் கவாஸ்காருக்கு சரியான வாரிசு தான் இவர்.

ஹெப்லர் வெஸல் தொடர்ந்து தென்னாபிரிக் காவின் கிரிக்கட் அணியின் கப்டனாக இருப்பார். அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குச் செல்லும் அணிக்கு அவர் தலைமை ஏற்றுச் செல்கிறார். வெஸல்ஸிற்கு முழங்காலில் ஏற்பட்ட காயம்காரண மாக அவர் கப்டனாக இருக்கமாட்டாரென்று முன் னர் உலாவிய வதந்திகளுக்கு இது முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது.

ரோமில் நடைபெறும் உலக நீச்சல் போட்டி களில் சீனப் பெண்கள் உலக சாதனைகள் நிகழ்த்து கிறார்கள். தங்கப் பதக்கங்களை குவிக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் இந்தத் துறையில் பெயர் தெரியாது இருந்த நாடு சீனா. தங்கள் வெற்றிக்கு, அர்ப்பணமான பயிற்சியும் பயிற்சியாளருமே கார ணமென்கிறார்கள் இவர்கள்.

1994 ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுக் களின் தீப்பந்தம் 11-09-94 அன்று ஏற்றப்பட் டது. பீங்கிங்கில் நடந்த முந்திய விளையாட்டுக் களின் போது இருந்த தீப்பந்தம் எடுக்கப்பட்டது.

ஜப்பானில் ஹிரோஸிமாவின் மேஜர், அதன் ஆளுனர் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்கள். ஒக்டோபர் 02 - 11 ஆம் திகதி வரை நடைபெற இருக்கும் ஆசிய விளையாட்டுக் களில் 7000 விளையாட்டு வீரர்கள் 42 நாடுகளில் இருந்து கலந்து கொள்வார்கள் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது.

## எரிபொருள்

எரிபொருள் என்னும் பொருள் எரிக்கப் படும்போது சூடு, வெளிச்சம் என்பன பெறப் படுவதுடன் ஆற்றலும் உண்டாகிறது. எரி பொருளிலுள்ள ஆற்றல் சூரியனிலிருந்தே பெறப்படுகின்றது. உலகில் பலவகையான எரி பொருள்கள் காணப்படுகின்றன. அவைகளில் விறகு, நிலக்கரி, இயற்கைவாயு, நில எண்ணெய் என்பன பொதுவானவையாகும். எரிபொருளைத் திண்மையானவை, நீரகத்தன் மையானவை, வாயுத்தன்மையானவை எனப் பிரிக்கலாம்; அல்லது அவைகள் தோன்றிய விதத்திலிருந்து இயற்கையானவை, வேதியல் வகையானவை, உலக அடிப்படையானவை எனவும் வகுக்கலாம்.

உங்கள் உணவின் சுவை குன்றாமல் இருக்க நம்பிக்கையான
எமது சேவையும் உங்களுக்குத் தேவை !

ஆம்-

- நெல்லுடைத்தல்
- அரிசி தீட்டல்
- மாவு அரைத்தல்
- மிளகாய் - தானியங்கள் திரித்தல்

இவற்றை தரமான, பதமான முறையில்
நாம் செய்து கொடுக்கின்றோம்.

குறித்த நேரம்! நம்பிக்கை!! நாணயம்!!!

# துர்க்கா அரைக்கும் ஆலை,

ஏழு முள்ளிச் சந்தி,
மானிப்பாய்.




# அறிவுலகம்

# பூமி-EARTH

நாங்கள் வாழும் இந்த மண்டலம் ஒரு முழு வட்டம் அல்ல. உண்மையில் அது பூமத்திய ரேகையில்சிறிதுவீங்கி துருவங்களில் அது தட்டையாகிறது; இந்த வடிவம் கோணல் கோளை வடிவம் ஒப்லேற்ஸ் பெறோயிட் (Oblates pheroid) என அறியப்படுகின்றது. எங்களுடைய உலகை ஒரு தொடராக அமைந்த பந்துகளாக பார்க்கமுடியும். இவை வெங்காயத்தின் தோல்கள்போன்று ஒன்றுக்குள்ஒன்று அமைந்து காணப்படுகின்றது. முதலாவதாக, மண்டலம் அங்கே இருக்கின்றது. இது புவிக்கோள் ஜியோஸ்பியர் (Geosphere). வெளிப்பகுதியான பாறைப் பகுதி – பாறைக்கோள் லிதோஸ்பியர் (Lithosphere). இதன்மேல் தாவரங்களும், மிருகங்களும் வாழும் பகுதி உயிர்ப்பகுதிக் கோள் பையோஸ் பியர் (Biosphere). இதைச் சுற்றிய உறையாக இருப்பது வளி. அது வளிக்கோளம் அற்மோஸ்பியர் (Atmo sphere). இது மேலும் பல படைகளாகப் பிரிக்கப்பட்டு அடியில் ரொப்போஸ்பியர்(Troposphere); அதன் ஸ்றாற்ரோஸ்பியர் (Stratosphere) மெசோபியர் (Mesosphere) படைகளுக்கூடாக இருக்கிறது. அதன்மேல் தேமோஸ்பியர் (Thermosphere) இதை ஐனோஸ்பியர் (Ionosphere) எனவும் அழைக்கலாம். இது பூமியின் மேற்பரப்பிலிருந்து 80 கி. மீ. தொலைவில் இருக்கிறது. ரொப்போஸ் பியரில் தான் எங்களுடைய காலநிலை நிலவுகின்றது.

பூமியின் உட்பகுதி (ஜியோஸ் பியர் – புவிக்கோள்)யும் படைகளால் ஆக்கப்பட்டது.




இரும்பு, நிக்கல், சேர்வை (Alloy) அமுக்கப்பட்டு மையமாக திண்மமாக மத்தியில் இருக்கின்றது. இதன் வெளிப்புறத்தில் முக்கியமாக இரும்பை, நிக்கலை ஆனால் ஓர் அளவிற்கு சிலிக்கன், கெந்தகம் (Sulphate) கொண்ட திரவ மையம் அமைந்துள்ளது. அடுத்த படைக்கு, தளர்ந்த மேலங்கியான (மான்ரில்) பொருட்கள் வெப்பமடைவதாலும், குளிராவதாலும் மேல் எழுந்து விழுகின்றன. இந்த அசைவுகள் தான் தொடர்ந்த அசைவையும், பிளேட் ரெக்ரோனிக்ஸ் என்பவற்றிற்குக் காரணமென்ற நினைப்பை ஏற்படுத்துகின்றன. பாறைத்துள் அல்லது லித்தோஸ் பியர், அதன் உட்பொருட்களில் பொதுவாக வேறுபட்டு பரந்த பாறை வகைகளினால் அமைந்துள்ளது.

## தட்டையான பூமி

500 வருடங்களுக்கு முன்புவரை மக்கள் பூமி தட்டையானதென நினைத்தார்கள். ஒரு கப்பல் கிழக்காகவோ, மேற்காகவோ வெகு

தூரம் சென்றால் முடிவில் அது பிரண்டுவிடு மென நினைத்தார்கள். முன்பு நிகழ்ந்த கடல் பயணக் கண்டுபிடிப்புகள் பூமிவட்டமானதெனக் காட்டின. 1492இல் கொலம்பஸ் கடல் பயணம் செய்தபோது ஐரோப்பாவிலிருந்து மேற்காகக் கடல் பயணம்செய்து ஒரு புதுமுறையை ஆசியாவிற்கும் இந்தியாவிற்கும் செல்லத் தேடினார். அங்கிருந்து உலகைச் சுற்றிவர எண்ணியதற்குப் பதிலாக அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

4. 6 பில்லியன் (1 பில்லியன் – நூறு கோடி) வருடங்களுக்குக் கிட்ட பூமி அமைப்பு ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது. தூசும் வாயுவும் நிறைந்த முகிற் கூட்டம் புவியீர்ப்புசக்தியின் மூலம் ஒரு திண்மக்கோளையை உருவாக்க உருகியது. அதன் பின்பு பலமில்லியன் வருடங்களின் பின்பு பாறைத்துகள்களும், சமுத்திரங்களும், வளி மண்டலங்களும் ஏற்பட்டன. 200 மில்லியன் வருடங்களின் முன் அங்கு தனிப்பட்ட நில அமைப்பு இருந்தது. அது பின்பு சிறு நில அமைப்புகளாகப் பிரிந்தன. இறுதியில் பல மில்லியன் வருடங்களின் அசைவான பின்பு இப்பொழுது எங்களுக்குத் தெரிந்த கண்டங்களாக அமைந்தன.





மக்கள் முன்பு தட்டையெனக்கருதிய பூமி இப்பொழுது விண்வெளிக்கல படங்களின் மூலம் ஒரு பந்தின் அமைப்பைக் கிட்டத்தட்டக் கொண்டுள்ளதெனப் பார்க்க முடியும். நீர் 71 வீதம் பூமியை மூடியுள்ளது அல்லது 361 மி. கி. ச வர்க்கம்.

**பூமியின் உண்மைகளும் உருவங்களும்**

உலகச் சனத்தொகை 5,400 மில்லியன்.

சுற்றளவு (வட்டத்தின்) 40,075 கி.மீ.

பூமத்திய ரேகையில் விட்டம் 12,756 கி.மீ.

துருவங்களின் ஊடாக விட்டம் 12,713 கி.மீ.

சூரியனிலிருந்து தூரம் ஆனி 21,152 கி.மீ.

டிசம்பர் 22,147 மில்லியன் கி.மீ. சமுத்திரங்களின் கனவளவு 1.21 கி.மீ கனம். வயது ஏறக்குறைய 4550 மில்லியன் வருடங்கள்.

புவியின் பாறைத்துகள்கள் (Crust) சமுத்திரங்களின்கீழ் 08 கி.மீ. இல் இருந்து கண்டங்களின்கீழ் 40 கி.மீ. வரை தடிப்பில் வேறுபட்டிருக்கின்றன. (மான்ரில்) தளர்ந்த மேலங்கி பொருட்களாக, வெளிமையமாக (அவுட்டர் கோர்), உள்மையமாக (இன்னகோர்) புவியின் உள்ளமைப்பு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளன. தளர்ந்த மேலங்கிப் பொருட்கள் (மான்ரில்) 2,900 கி. மீ. திண்மப் பாறைகளைக்கொண்ட தடித்தபட்டை. வெளிமையம் (அவுட்டகோர்) 2,250 கி. மீ. தடிப்புஉள்ளது.

புவியின் மேற்பரப்பில் 2/3 பகுதி நீரினால் மூடப்பட்டுள்ளது. நிலப்பரப்பு 29% கொண்டுள்ளது.

பாறைத்தூள்–Crust

தளர்ந்த மேலங்கி– Mantle

வெளிமையம்– Out core

மையம்– Core

பூமி தனது மையக் கோட்டைச் (அச்சில்) சுற்றி சுழல்கின்றது. அதன்செங்குத்திலிருந்து 23° (பாகை) அதை சரிக்கின்றது. இந்தச் சரிவும்சூரியனை வலம் வரும் அதன் அசைவும் காலங்களை மாற்றுவதற்கு காரணமாகின்றன, பூமியின் வடக்கு அரைப்பகுதி கோடையில் சூரியனை நோக்கிச் சரியும், பின்பு குளிர் காலத்தில் அதிலிருந்து தூரவாகச் சரியும். (இமே)

# அறிவுலகம்

## கேள்வி • பதில்

ஆனந்தி

*எஸ். சிவராமன்,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

*மயில்களிடையே இனச்சேர்க்கை இல்லையெனக் கேள்விப்பட்டேன் உண்மையா?*

அப்படியானால் மயில் இனமே தோன்றியிருக்க முடியாதல்லவா? உயிரினங்கள் ஒவ்வொன்றினதும் இயல்பான ஒரு நடத்தைக்கோலமே இனப் பெருக்கம். அது இன்றி உலகே இல்லையே...

*(இவ் வினாவை மானிப்பாய் லியோவும் கேட்டுள்ளார்)*

*சா. கிருபாகரன்*
*குளவிசுட்டான், நெடுங்கேணி.*

*காடுகளை அழிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் எவை?*

நாடே அழிந்துவிடும், என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! மழை இல்லை, ஒட்சிசன் இல்லை, உணவு இல்லை, உயிரியல் சமநிலையே இல்லை... அதற்கப்புறம் என்ன? நாடு நரகமாகும்... அவ்வளவுதான்.

*நா. சசிகலா*
*நாவற்குழி தெற்கு, கைதடி.*

*அன்புள்ள ஆனந்தி அக்கா!... குளிர்காலத்தில் உலோகப் பொருட்களைத் தொட்டால் மிகவும் குளிர்ச்சியாக உள்ளது, ஆனால் மரப்பொருட்களைத் தொட்டால் அவ்வாறு இருப்பதில்லையே ஏன்?*

சசி!... உலோகம் ஒரு எளிதில் கடத்தி எமது உடலில் இருந்து வெப்பத்தைக் கடத்துவதால், தொடும் பரப்பில் உள்ள எமதுதோல் வெப்பத்தை இழப்பதால் குளிர்ந்து விடுகின்றது. மரம் ஒரு வெப்ப அரிதிற் கடத்தி.

*ரேணுகா நாகலிங்கம்*
*வல்வை றோட், தொண்டைமானாறு.*

*பெண்களுக்கு சிவப்பு ரோஜாவைக் கண்டால் ஒருவித அலர்ஜியாம் ''ஆஸ்மா'' உண்டாகும் என்று கூறுகின்றார்கள் உண்மையா?*

பெண்களுக்கு ரோஜாவைக் கண்டால் அலர்ஜி, தங்கத்தைக் கண்டால் அலர்ஜி, நல்ல பட்டுச் சேலையைக் கண்டால் அலர்ஜி... இன்னும் எது எதுக்கெல்லாமோ அலர்ஜி வரும் ஆனால் ஆஸ்மா வராது ரேணுகா!

*சு. சுரேஸ்காந்த், வெற்றிலைக்கேணி,*
*பரமேஸ்வரா வித்தியாலயம், முள்ளியான்.*

*கடலில் வாழும் ஒருவகை மீனினம், மனிதர்களுக்கு கடலில் ஆபத்து ஏற்படும் நேரங்களில் உதவி புரிவதாக சில செய்திகள் மூலம் அறிந்தேன். இவ்வாறு உதவிபுரியும் மீனின் பெயர் என்ன? அதைப் பற்றிச் சிறிது விளக்குக?*

இவ்வகையான கடல்வாழ் வகை இனம் டொல்பின்கள் எனஅழைக்கப்படும். இவை திமிங்கில வகையைச் சேர்ந்தவை. இது டொறாடோ கொறிபேணிடே (Derado coryphaenadae) என்ற குடும்பத்தைச் சேர்ந்தது. மனிதருக்கு உதவிசெய்யும் சாதாரண டொல்பின்கள் மத்தியதரைக் கடலிலும், வட அத்திலாந்திச் சமுத்திரத்திலும் அநேகமாகக் காணப்படுகிறது. விரைவாக நீந்திச் செல்பவையாதலால் ''கடல் அம்பு'' எனச் செல்லமாக அழைக்கப்படுகிறது. ஒல்லியான ஏழு அடி நீளமுள்ள இவ்வினம் தங்கள் சகாக்களுடன் ஒருவித சீழ்க்கை ஒலியினால் தொடர்பு கொள்கின்றன. இவற்றின் பிற்பகுதி கறுப்பாகவும், முன்பக்கம் சாம்பல் நிறமாகவும், கீழ்ப்பகுதி வெள்ளையாகவும் இருக்கும் கூரிய பற்களைக் கொண்ட மிகப் பலம் வாய்ந்த தாடைகள் ஆறு அங்குல நீள கூரான அதன் அலகின் ஒரு பகுதியாக இருக்கும். இம் மீன் பல சந்தர்ப்பங்களில் மனிதர்களுடன் கூடவே நீந்தி வந்து அவர்களை ஆபத்தில் இருந்து காப்பாற்றியிருக்கின்றன.

*லியோ, சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*

*பூமியின் உபகோள் சந்திரன் என்கிறார்கள் சந்திரன் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, பூமியைச் சுற்றுகிறதா? அல்லது பூமியை மட்டும் சுற்றிவருகிறதா? பூமி தன்னைத்தானே சுற்றும் நேரம் என்ன?*

சந்திரன் தன்னையும் சுற்றி, பூமியையும் 27 நாட்களுக்கு ஒருமுறை சுற்றிவருகின்றது. பூமி தன்னைத்தானே சுற்றும் வேகம் இடத்திற்கு இடம்

மாறுபடும். பூமியின் சுற்றளவு 24902.4 மைல்கள் இந்தத் தூரத்தைச்சுற்றிவர 24 மணித்தியாலங்கள் எடுக்குமாயின் அதன் வேகத்தை மணிக்கு எத்தனை மைல்கள் என்று கணக்கிடலாமல்லவா?

ஏஸ். வானதி,
தண்ணீரூற்று, முள்ளியவளை.

*பரம்பரை இயல்புகளுக்குக் காரணமான உயிர்க் கலங்களில் உள்ள நியுக்கிளிக் அமிலத்தின் ஒரு பகுதியான டி. என். ஏ. யைக் கண்டுபிடித்தவரைப் பற்றிச்சிறிது கூறுங்கள்?*

பரம்பரை இயல்புகளுக்குக் காரணமான பரம்பரை அலகுகளைக் (Genes) கொண்டுள்ள டி. என். ஏ. (D. N. A.) என்ற பதார்த்தத்தை சுவிற்சலாந்தைச் சேர்ந்த பிரெட்ரிக் மிஷெர் (Fredrick Misher) என்னும் விஞ்ஞானி 1889 ல் கண்டுபிடித்தார். டி. என். ஏ. மூலக்கூறு ஒன்றின் அமைப்பை உருவாக்கியவர்கள் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய விஞ்ஞானிகளான பிரான்சிஸ் எச். சி. கிரிக் என்பவரும், டீயுயி- வாட்சன் என்பவரும். இவர்கள் இருவரும் 1953 ல் இதனை அமைத்தனர்.

க. உஜிதன்,
யாழ்ப்பாணம்.

*ஊனுண்ணித் தாவரங்கள் என்பன நீரையும் கனியுப்புக்களையும் எவ்வாறு பெறுகின்றன?*

இவ்வகைத் தாவரங்கள் சேற்று நிலங்களில் வாழ்பவையாதலால் தமக்கு வேண்டிய நீரையும் கனியுப்புக்களையும் வேரினூடாகவே பெற்றுக் கொள்கின்றன. இவ்வகையான சூழலில் நைதரசன் பற்றாக்குறையாக இருப்பதால் ஊனுண்ணித் தாவரங்கள் தமக்குத் தேவையான நைதரசனைப் பெறுவதற்காக பூச்சி போன்ற ஊன்களை உள்ளெடுக்கின்றன. இவ்வகையான தாவரங்களின்சில பகுதிகள் பூச்சிகளைக் கவர்வதற்கேற்ற வகையில் பல்வேறு இசைவாக்கங்களைக் கொண்டிருக்கும்.

***அன்பான வாசகர்களே,***

***அறிவுலகம் பகுதிக்கு நீங்கள் தரும் ஆதரவுக்கு நன்றி! ஏற்கனவே இப்பகுதியில் இடம்பெற்ற வினாக்களை விடுத்து புதியவற்றை எழுதுங்கள். 'அறிவுலகம்' பகுதிக்கு அனுப்பும் வினாக்களை தனியான ஒரு தாளில் முழுப்பெயர் விலாசம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.***

**அறிவுலகம்**
**''சாளரம்''**
**வேம்படி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# வெண்களிமண் (பீங்கான்)

வெண்களிமண்ணானது பலஆண்டுகளுக்கு முன்பு சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பாண்டங்கள் செய்யப்பட்டதாகும். இது ஐரோப்பாக் கண்டத்தை நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே சென்றடைந்தது. ஆனால் ஐரோப்பியர்களால் தொடக்கத்தில் செய்யப்பட்ட பாண்டங்கள் திறமாக அமையவில்லை. 1708 ஆம் ஆண்டில் ஜெர்மனியிலுள்ள டிரெஸ்டென் என்னுமிடத்தில் இதற்குத் தேவையான சிறப்பான களிமண் கண்டுப்டிக்கப்பட்ட பின்பே அங்கு செய்யப்பட்ட பாண்டங்கள் சிறப்பாய் அமைந்தன.

உண்மையான வெண்களிமண் (பீங்கான்) சீனக்களி அல்லது மென்மையான வெண்களி மண்ணால் செய்யப்பட்டது. இது மிகவும் கடினமானதும், வலிமையுடையதுமாகும். ஆனால் இதன் மூலம் வெளிச்சத்தைப் பார்க்க முடியும். மிகவும் புகழ் வாய்ந்த சீனப்பீங்கான்கள் மிங் பரம்பரைக் (1368 – 1644) காலத்தைச் சேர்ந்தவையாகும். ஐரோப்பாவின் புகழ்பெற்ற பீங்கான்கள் டிரெஸ்டனிலும் பிரான்சிலுள்ள செவ்றேனிலும் செய்யப்பட்டவையாகும்.

# ஆங்கிலம் மொழி கற்போம் - 07 -

LANGUAGE

LEARN ENGLISH

## COLONEL KIDDU CHILDREN PARK

## கேணல்கிட்டு சிறுவர் பூங்கா

| | | | | |
|---|---|---|---|---|
| Son:- | Mother, I am tired of walking. Can we buy some ice - cream? | — | மகன்:- | அம்மா, நடந்து எனக்குக் களைப்பாயிருக்கிறது கொஞ்சம் 'ஐஸ்கிறீம்' வாங்க முடியுமா? |
| Mother:- | Not here. Son. We can buy ice - cream in Kiddu Mama Children Park. | — | தாய்:- | மகனே! இங்கேயல்ல. கிட்டுமாமா சிறுவர் பூங்காவில் 'ஐஸ்கிறீம்' வாங்கலாம். |
| Son:- | Have we to go a long way? | — | மகன்:- | நாங்கள் வெகுதூரம் போகவேண்டுமா? |
| Mother:- | No, It's close by. We have now passed the Nallur Temple. Look, There's a big crowd at the junction where the statue of Chankilian, the ancient Tamil king is. | — | தாய்:- | இல்லை. அது அருகில் உள்ளது. நாம் இப்பொழுது நல்லூர் கோவிலைத்தாண்டி விட்டோம். அதோ பார் புராதன தமிழ் மன்னன் சங்கிலியன் சிலை இருக்கும் சந்தியில் ஒரு மக்கள் கூட்டம். |
| Son:- | What are the people doing there? | — | மகன்:- | மக்கள் அங்கே என்ன செய்கிறார்கள்? |
| Mother:- | They are buying tickets at the entrance of Kiddu Mama Park. | — | தாய்:- | கிட்டுமாமா பூங்காவின் நுழைவாயிலில் பிரவேசச்சீட்டு வாங்குகிறார்கள். |
| Son:- | Why is this park named after Kiddu Mama? | — | மகன்:- | எதற்காக இப்பூங்காவிற்கு கிட்டு மாமாவின் பெயரிடப்பட்டுள்ளது? |
| Mother:- | It's because Kiddu Mama loved Children and worked for the people. | — | தாய்:- | கிட்டுமாமா குழந்தைகளை அதிகம்நேசித்ததுடன் மக்களுக்காகவும் உழைத்ததினால்தான். |
| Son:- | But who is Kiddu Mama? | — | மகன்:- | ஆனால், கிட்டுமாமா என்பவர் யார்? |
| Mother:- | Don't you know Kiddu Mama? We can see him in the park now. His statue is erected there to perpetuate his memory. He was one of the great freedom fighters of our time. | — | தாய்:- | கிட்டுமாமாவை உனக்குத் தெரியாதா? அவரை இப்பொழுது பூங்காவில் பார்ப்போம். அவரின் நினைவை என்றும் நிலைநாட்டுவதற்காக அவரின்சிலை அங்கு நிறுவப்பட்டுள்ளது. எங்கள் காலத்தின் சிறந்த சுதந்திர போராளிகளில் ஒருவர் அவர். |

| | | | |
|---|---|---|---|
| **Son:-** | When did he die? — | மகன்:– | அவர் எப்பொழுது இறந்தார்? |
| **Mother:-** | He died in January last year. — | தாய்:– | கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் அவர் இறந்தார். |
| **Son:-** | Mother; Tell me more about Kiddu Mama. — | மகன்:– | அம்மா, கிட்டுமாமாவைப் பற்றி கூடச் சொல்லுங்கள். |
| **Mother:-** | Kiddu Mama was a senior member of the LTTE. When he was in command of Jaffna, he fought along with his cadres and prevented the army from penetrating into the populated areas. He loved his people and made great sacrifices for the Tamil people. — | தாய்:– | கிட்டுமாமா விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். அவர் யாழ்ப்பாணத் தளபதியாகவிருந்த பொழுது தன் சகாக்களுடன் சேர்ந்து போராடி, படையினர் மக்கள் குடிமனைகளுள் புகாமல் அவர்களைத் தடுத்தார். மக்களை நேசித்த அவர் தமிழ்மக்களுக்காக பெருந்தியாகம் செய்தார். |
| **Son:-** | Mother! Here comes uncle Bala. Good evening uncle. | மகன்:– | அம்மா! இதோ பாலாமாமா வருகிறார். வணக்கம் மாமா. |
| **Uncle.-** | Gocd evening. I have bought two tickets for you. You can enter the park through this gate. — | மாமா:– | வணக்கம். உங்களுக்கு இரு நுழைவுச் சீட்டுக்கள் வாங்கி வந்திருக்கிறேன். இந்த நுழைவாயினூடாக நீங்கள் பூங்காவினுள் செல்லலாம். |
| **Son:-** | Uncle; Where is Kiddu mama's statue? — | மகன்:– | மாமா, கிட்டுமாமாவின் சிலை எங்கே? |
| **Uncle:-** | Look. It's there in the middle of the park. Come Let's go and see it. — | மாமா:– | அதோ பார், பூங்காவின் நடுவில் இருக்கிறது. வாருங்கள், அதை நாம் போய்ப் பார்ப்போம். |
| **Mother:-** | It's a life - size statue, and looks exactly like the courageous and cmmitted colonel Kiddu. — | தாய்:– | அது ஒரு ஆள் அளவுச் சிலை. துணிவும் அர்ப்பணமும் உடைய தளபதி கிட்டுவைப் போலவே சரியாக அமைந்துள்ளது. |
| **Son:-** | Uncle! What's that mountain over there? — | மகன்:– | மாமா அங்கே இருப்பது என்ன மலை? |
| **Uncle:-** | Come. I'll take you there. First, we'll go through this cave. Look at these fish tanks. — | மாமா:– | வாருங்கள், நான் அங்கு கூட்டிச் செல்கிறேன். முதலில் இந்தக் குகையினூடாகப் போவோம். இந்த மீன் தொட்டிகளைப் பாருங்கள். |
| **Son:-** | They are very pretty and beautiful. Oh! what a variety of fish! — | மகன்:– | அவை மிக அழகு சுந்தரமாக இருக்கின்றன. ஓ! எத்தனை விதமான மீன்கள்! |
| **Uncle:-** | Now, we'll climb the steps and go up the mountain. — | மாமா:– | இப்போது நாம் படிகளில் ஏறி மலைக்குப் போவோம். |
| **Mother:-** | What a wonderful sight from the top! That water - fall is fascinating! — | தாய்:– | உச்சியிலிருந்து பார்க்கும் பொழுது என்ன ஆச்சரியத்துக்குரிய காட்சி! அந்த நீர் வீழ்ச்சி கண்ணைக் கவருகிறதே! |
| **Son:-** | Uncle Bala! Can we have some ice - cream? — | மகன்:– | பாலா மாமா ஐஸ்கிறீம் சாப்பிடலாமா? |

மா நகர சபை

| | | | |
|---|---|---|---|
| **Uncle:-** | You cross this suspension bridge and rest a while in that small hut. In the meantime, I'll buy the ice - cream for you. | மாமா :– | நீங்கள் இந்த தொங்கு பாலத்தைக் கடந்து சிறிது நேரம் அந்த சிறு குடிசையில் இளைப்பாறுங்கள் அதற்கிடையில் நான் உங்களுக்கு ஐஸ்கிறீம் வாங்கிவருகிறேன். |
| **Son:-** | Mother! I get a funny feeling, walking across this hanging bridge. | மகன் :– | அம்மா, இந்தத் தொங்கு பாலத்தைக் கடந்து செல்கையில் எனக்கு ஒரு விநோத மான உணர்வு ஏற்படுகின்றது. |
| **Mother:-** | Son. There is nothing to be frightened of. It's very safe. | தாய் :– | பயப்படுவதற்கு ஒன்றுமில்லை, மகனே. அது மிகவும் பாதுகாப்பானது. |
| **Son:-** | Ahh! We have crossed the bridge. | மகன் :– | ஆ! நாம் பாலத்தைக் கடந்துவிட்டோம். |
| **Mother:-** | We'll sit here and wait for uncle to come. | தாய் :– | மாமா வருமட்டும் இவ்விடத்தில் இருப் போம். |
| **Son:-** | Mother! uncle Bala is coming with three ice - cream cones. | மகன் :– | அம்மா! பாலா மாமா மூன்று ஐஸ்கிறீம் குவளைகளுடன் வருகிறார். |
| **Uncle:-** | After eating the ice - cream, you can play on the swings. | மாமா :– | ஐஸ்கிறீம் சாப்பிட்டபின் நீ போய் ஊஞ் சல் ஆடலாம். |
| **Son:-** | Thank you, uncle Bala. The ice - cream is very delicious. I feel refreshed now. I am going to play on the swings. | மகன் :– | நன்றி பாலா மாமா. ஐஸ்கிறீம் மிகவும் சுவையானதாயுள்ளது. இப்பொழுது புதுவலுப் பெற்றுள்ளேன். நான் ஊஞ்சல் ஆடப்போகிறேன். |
| **Uncle:-** | There's so much here to enjoy in this park. We can stroll around. The flower - gardens are beautiful. We can see the photos of the martyrs. We can sit and relax here. | மாமா :– | இங்கு ரசிப்பதற்கு இந்தப் பூங்காவில் அதிகமுண்டு. நாம் உலாவித்திரியலாம். பூந்தோட்டங்கள் அழகானவை. மாவீரர்களின் உருவப்படங்களைப் பார்க்க லாம். இங்கிருந்து இளைப்பாறலாம். |
| **Mother:-** | You are right. I'll have to bring the children again on another day. | தாய் :– | நீ சொல்வது சரி. இன்னுமோர் நாளில் நான் என் பிள்ளைகளைத் திரும்பவும் கொண்டுவர வேண்டும். |

# பொது அறிவுப் போட்டி - 6

1. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி யானது–

1. பத்து ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறு கிறது.
2. நான்கு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறு கிறது.
3. ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறு கிறது.

02. சூமேக்கர் லெவி (Shoemaker Levy) வால் நட்சத்திரம் பல துண்டுகளாகி வியாழக் கிரகத்தின் மீது மோதியது. அதன் முதல் துண்டு மோதியநாள்

1. 1994 யூலை 16 ஆம் திகதி.
2. 1994 யூலை 22 ஆம் திகதி.
3. 1993 யூலை 18 ஆம் திகதி.

03. தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பாடசாலை மாணவனாக இருந்த இளம் வயதில் தமது ஊரைச் சேர்ந்த தமிழாசிரியர் ஒருவர் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற எண்ணத்தை தன்னுள் ஏற்படுத்தியதாக பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அந்த ஆசிரியரின் பெயர்–

1. திரு. நவரத்தினம்.
2. திரு. வேணுகோபால்.
3. திரு. கோபல கிருஸ்ணன்.

04. 'மருத்துவத்தின் தந்தை' எனப்போற்றப் படுகின்ற அறிஞர்–

1. சிக்மன் பிராய்ட்.
2. ஐன்ஸ்ரீன்.
3. ஹிப்போகிறட்டீஸ்.

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

05. 1959 ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியின் விளைவாக கியூபா இந்த ஆண்டில் தனிநாடாகியது–

1. 1960
2. 1961
3. 1962

06. ருவாண்டாவில் பெரும்பான்மை இனத்தவர்–

1. குட்டு (Hutu) இனத்தவர்
2. துட்சி (Tutsi) இனத்தவர்
3. ஆங்கிலேயர்

07. ருவாண்டாவின் தலைநகர்–

1. புறூண்டி
2. உகண்டா
3. கிகாலி

08. அணுவின் கழிவானாலும் அதில் கதிரியக்கம் இருந்து கொண்டுதானிருக்கும். அது முற்றாக செயலிழக்க சுமார் இத்தனை ஆண்டுகளாகும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்–

1. 500 ஆண்டுகள்
2. 1000 ஆண்டுகள்
3. 2000 ஆண்டுகள்

## ஜூன் – ஜூலை பொது அறிவுப்போட்டி 5க்கான விடைகள்

01) இரத்ததானம் செய்பவர்களுக்கு இந்நோய் ஏற்படும் சாத்தியம் குறைவு என மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மாரடைப்பு

02) 1945 ஆம் ஆண்டு ஹிரோசிமாவை முற்றாக அழித்த அணுகுண்டின் எடை 4100 கிலோ கிராம்

03) ஆங்கிலத்தில் Fear என்பது பயம்

04) 1998 ஆம் ஆண்டின் உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டத் தொடர் போட்டி இங்கு நடைபெறவிருக்கின்றது. பிரான்ஸ்

05) உலகின் முதலாவது வானொலித் தொலை நோக்கி அமெரிக்காவின் இலிநோய்ஸ் மாநிலத்திலுள்ள வீட்டன் நகரைச் சேர்ந்த குறோட்டறேபர் என்பவரால் இந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. 1937

06) அமெரிக்க உளவுப்பிரிவான சி. ஐ. ஏ. யின் சதியால் கொலை செய்யப்பட்ட புகழ்பெற்ற கவிஞர். பப்லோ நிருடா

07) சேக்ஸ்பியரின் 'மாக்பேத்' என்ற நாடகத்தை வங்காளத்தில் மொழிபெயர்த்தவர் இவராவார். ரவீந்திரநாத்தாகூர்

08) சிங்கப்பூர் சுதந்திரம் பெற்ற ஆண்டு இதுவாகும். 1959

சரியான விடைகளை எழுதியனுப்பிய ஏராளமான வாசகர்களில் அதிஸ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளோர் இவர்கள்.

### முதலாம் பரிசுக்குரியவர்

கு. ஜெகதாஸ் ஆண்டு 11
யா / கம்பர்மலை அ. த. க. பாடசாலை
வல்வெட்டித்துறை.

### இரண்டாம் பரிசுக்குரியவர்

சி. வசந்தா, ஆண்டு 12
யா / சந்திரபுர ஸ்கந்தவரோயா ம. வி.
சாவகச்சேரி.


### மூன்றாம் பரிசுக்குரியவர்

ந. ஆரணி
இல 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை
சுண்டுக்குளி.

இவர்களுக்கு யாழ் எழிலகம் வழங்கும் முறையே 250 ரூபா, 150ரூபா, 100 ரூபா பெறுமதியான அன்பளிப்பு மடல்கள் அனுப்பி வைக்கப்படும். அம் மடல்களைக் கொண்டு எழிலகத்தில் விரும்பிய பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது அறிவுப் போட்டிக் கேள்விகளுக்கான விடைகள் கடந்த சாளரம் இதழ்களிலேயே உள்ளன. உங்கள் விடைகளை பொது அறிவுப் போட்டி, சாளரம், வேம்படி வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தாமதிக்காமல் அனுப்பிவைக்க வேண்டும்.

வண்ணக் கனவுகள் நனவுகளாகும் வாழ்வின் வசந்த வேளைகளில்
உங்கள் எண்ணங்களில் எழவேண்டிய இடம்



## மதுரா பட்டுமகால்

வானவில் போன்ற வண்ணங்களில்
கண்கவர் பட்டுப்புடவைகள்
மற்றும்—
பட்டு வேட்டிகள் சிறுவர் சிறுமியருக்கு
ஏற்ற வகையிலான விதம் விதமான
ஆடைத்தெரிவுகளுக்கு

# மதுரா பட்டுமகால்

75, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

சண்டிலிப்பாயில் சேவை புரிகிறது

# டொக்டர் விஸ்வநாதன்

## வைத்திய நிலையம்

குழந்தைகள், ஆண், பெண்
கர்ப்பிணிகளுக்குரிய சகல
நோய்களுக்குமான சிகிச்சைகள்
மேற்கொள்ளப்படும்.

சுவாசம், இரத்தம் சம்பந்தப்பட்ட
நோய்கள், பல வகையான
தலைவலிகள், வயிற்று நோய்கள்,
பல விதமான காய்ச்சல்கள், வாதம்
போன்ற அனேக நோய்களுக்கும்

நம்பிக்கையுடன், அதிசயிக்கத்தக்க
வகையில் சிகிச்சைகள்
அளிக்கப்படும்.

# டொக்டர் விஸ்வநாதன்

## வைத்திய நிலையம் (ஆங்கில வைத்தியம்)

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் காரியாலயத்திற்கு சமீபமாக

ராஜஸ்தான் - சண்டிலிப்பாய்